★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஏப்ரல் 5 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரන්
1932 - 2022

வரு. 90 இல. 81 | Tuesday 05, April, 2022 | 16பக்கங்கள் | 30/-




## தேசிய நெருக்கடிகளுக்கு தீர்வு காண ஒன்றிணையுமாறு

# அனைத்து கட்சிகளுக்கும் ஜனாதிபதி பகிரங்க அழைப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு எதிர்கொண்டுள்ள தேசிய நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு முன்வருமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அழைப்பு தொடர்பில் நேற்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு விசேட அறிக்கையொன்றை வெளியிட்டது.

**அமைச்சு பதவிகளை பகிர்ந்து தீர்வு காண பங்களிப்பு வழங்க வேண்டுகோள்**

பொருளாதாரம் மற்றும் உலகளாவிய ரீதியிலான நெருக்கடி நிலை காரணமாகவே நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை உருவாகியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவின் ஜனநாயக நாடுகளின் முன்னணி நாடுகள் வரிசையில் இலங்கை காணப்படுவதுடன் ஜனநாயகக் கட்டமைப்புக்குள்ளேயே நெருக்கடிக்கு தீர்வு காணப்பட வேண்டியுள்ளது என்றும் நாட்டு மக்கள் மற்றும் எதிர்கால

06

## புதிய அமைச்சர்களாக நால்வர் சத்தியப்பிரமாணம்









**லோரன்ஸ் செல்வநாயகம்**

அமைச்சரவை கலைக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று தற்காலிகமாக புதிய அமைச்சர்களாக நால்வர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். ஜனாதிபதி செயலகத்தில் நேற்று

06




## இடைக்கால அரசினை அமைக்க சஜித் மறுப்பு

### தனது டுவிட் பக்கத்தில் பதிவு



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இடைக்கால அரசாங்கத்திற்கு உடன்பட மறுத்துள்ளார்.

பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் செயல்படும் அரசியல் மாதிரியை தாம் விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஒரு புதிய இலங்கையானது வலுவான நிறுவனங்களுடன் ஆரம்பிக்கவேண்டும் அன்றி தலைமைகளின் மாற்றத்தினால் மாத்திரமல்ல.

இடைக்கால அரசாங்கம் என்பது உட்கட்சி அரசியலைத் தவிர வேறில்லை என்று அவர்

06

### போக்குவரத்து மற்றும் மின்விநியோக செயற்பாடு:

## IOCயிடமிருந்து 10 இலட்சம் லீற்றர் டீசல் அமைச்சு கொள்வனவு

### மேலும் 20 ஆயிரம் மெ.தொன் எரிபொருளுடன் கப்பல் வருகை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

போக்குவரத்துத் துறை மற்றும் மின்சார விநியோக செயற்பாடுகளுக்குத் தேவையான டீசலை ஐ.ஓ.சி நிறுவனத்திடமிருந்து 10 இலட்சம் லீற்றர் டீசல் கொள்வனவு செய்துள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டு ரயில்கள் மூலம் அவற்றை போக்குவரத்து செய்துள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சு, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களிலுள்ள

06



நிதி அமைச்சராக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நேற்று (04) முற்பகல் கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள நிதிஅமைச்சில் தனது பணிகளை மிகவும் எளிமையாக ஆரம்பித்தார்.

## ஜனாதிபதியின் அழைப்பு: JVPயும் நிராகரிப்பு



அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை ஏற்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சகல கட்சிகளுக்கும் விடுத்த அழைப்பை மக்கள் விடுதலை முன்னணி நிராகரித்துள்ளது.

எந்தவொரு சூழ்நிலையிலும்

06

## ரணில் எந்தப் பதவியையும் ஏற்கமாட்டார் – UNP

**லோரன்ஸ் செல்வநாயகம்**




ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க எந்தவொரு பதவியையும் பொறுப்பேற்கப் போவதில்லையென அந்தக் கட்சி நேற்றுத் தெரிவித்துள்ளது.

06

## மூன்று மாதங்களில் இலங்கைக்கு 2.5 பில்.டொலர் கடனுதவி

### இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிக்கை



ஜனவரியில் வழங்கப்பட்ட 400 மில்லியன் டொலர் பணப்பறிமாற்றல் உள்ளடங்கலாக இவ்வாண்டின் முதற்காலாண்டில் இந்தியா இலங்கைக்கு 2.5 பில்லியன் கடனுதவியை வழங்கியுள்ளதாக

06

## மூத்த கல்வியியல் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் காலமானார்




இலங்கையின் மூத்த கல்வியியல் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் தமது 78வது வயதில் நேற்று அதிகாலை காலமானார்.

காலி, பலப்பிட்டிய என்ற இடத்தில் உள்ள விருந்தகம் ஒன்றில் தங்கியிருந்தபோதே மாரடைப்பால் அவர் காலமானதாக அவரின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

06

## டீசல் வழங்கலில் தனியார் பஸ்களுக்கு முன்னுரிமை

### தனியார் பஸ் உரிமையாளர்கள் கோரிக்கை



டீசல் விநியோகிக்கப்படும் போது தனியார் பஸ்களுக்கு முன்னுரிமையளிக்க வேண்டும் என பஸ் உரிமையாளர்கள் மீண்டும் அரசாங்கத்திற்கு வலியுறுத்தியுள்ளனர்.

06

## புதிய போத்தலில் உள்ள பழைய மது!



### புதிய அமைச்சரவை குறித்து கம்மன்பில

புதிய அமைச்சரவையானது 'புதிய போத்தலில் உள்ள பழைய மது' போன்றதென முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அடுத்த தலைவர்களை மக்களே தீர்மானிக்க வேண்டும் எனவும் இதை வேறு யாரும் முடிவு செய்யக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். புதிய அமைச்சரவை என்பது

06

### ஜனாதிபதியின் இடைக்கால அரசமைக்க அழைப்பு:

## TNA, SLMC, TPA, ACMC கட்சிகளும் நிராகரித்தன




இலங்கையில் தற்போது நிலவும் தேசிய நெருக்கடிக்கு தீர்வு காண அனைத்துக் கட்சிகளை உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய அரசியல் கட்சிகளும் நிராகரித்துள்ளன.

அனைத்துக் கட்சிகள் அடங்கிய இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு கைகோர்க்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை தமிழ் தேசிய கூட்டமைப்பு நிராகரிப்பதாக நேற்று யாழ்ப்பாணத்தில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது பாராளுமன்ற உறுப்பினர்

06

## மத்திய வங்கியின் ஆளுநராக நந்தலால்?



இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பதவி விலகியதையடுத்து, புதிய ஆளுநராக மத்திய வங்கியின் முன்னாள் சிரேஷ்ட பிரதி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவை நியமிக்க ஜனாதிபதி

06

## அரசியல் கைதிகள் குறித்து எவ்வித அக்கறையுமில்லை

### சட்டமா அதிபரை சாடும் அருட்தந்தை சக்திவேல்



ஒரு நீதிமன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்டவர் இன்னொரு நீதிமன்றில் குற்றமற்றவர் என முடிவு செய்வது விசித்திரமாய் உள்ளது என அரசியல்


06

### பங்காளிக் கட்சிகளின் 16 MPக்கள்;

## பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவதற்கு தீர்மானம்

### விமல், கம்மம்பில உள்ளிட்ட சிலர் முடிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ள விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மம்பில ஆகியோர்

06

# சர்வதேச செய்திகள்

## உக்ரைனிய நகர வீதிகளில் சிதறிக்கிடக்கும் சடலங்கள்



### ரஷ்யா மீது குற்றச்சாட்டு

உக்ரைன் தலைநகர் கியேவின் புறநகரான புச்சாவில் ரஷ்யப் படையினர் பொதுமக்கள் பலரைப் படுகொலை செய்ததாகக் கூறப்படுகிறது. அதற்கு ரஷ்யத் தலைவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்று உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி கூறியுள்ளார்.

குறைந்தது 20 சடலங்கள் புச்சா வீதிகளில் வீசி எறியப்பட்டதாகக் கூறப்படுகிறது. சிலரது கைகளும் கால்களும் கட்டிவைக்கப்பட்டிருந்தன. சிலர் தலையின் பின்பகுதியில் சுடப்பட்டிருந்தனர்.

ரஷ்ய இராணுவத்தால் சுமார் 300 குடியிருப்பாளர்கள் கொல்லப்பட்டனர் என்று புச்சா மேயர் கூறினார்.

இங்கு 410 பேர் கொன்று புதைக்கப்பட்டதாக உக்ரைன் ஜனாதிபதி செலென்ஸ்கி தெரிவித்துள்ளார். இதில் கிறிஸ்தவ ஆலயம் அருகே 45 அடி நீள புதைக்குழியில் 280 உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அவர்கள் பாதி புதைக்கப்பட்ட நிலையில் இருந்ததாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். ஆனால் அவர்கள் உடல்களில் பெரிய அளவில் காயங்கள் எதுவும் இல்லை. இதனால் அவர்கள் அருகில் இருந்து துப்பாக்கியால் சுட்டு கொல்லப்பட்டு இருக்கலாம் என கூறப்படுகிறது.

இந்தப் படுகொலையை மேற்கத்திய நாடுகள் கடுமையாகக் கண்டித்துள்ளன. ரஷ்யா மீது கூடுதல் தடைகளை விதிக்கப்போவதாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் சூளுரைத்தார்.

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் அன்ட்டனி பிளிங்கன், கொடுமையான காட்சிகள் தம்மை வருத்தமடையச் செய்வதாகக் கூறினார்.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என ஐ.நா. வலியுறுத்தி உள்ளது.

எனினும் கொடூரச் செயல்களைக் காட்டும் வீடியோக்கள் பொய்யானவை என்று ரஷ்யா கூறியுள்ளது. புச்சாவில் ரஷ்ய துருப்புகள் இழைத்த குற்றங்கள் என கூறி உக்ரைன் நிர்வாகத்தால் வெளியிடப்பட்டுள்ள வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் 'ஆத்திரத்தைத் தூண்டுபவை' என்றும் புச்சாவில் ரஷ்ய துருப்புகளால் எந்த வன்முறையும் இடம்பெறவில்லை என்றும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த குடியிருப்பாளர்களின் கொலைக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார் என்பது பற்றி சுதந்திரமாக உறுதி செய்ய முடியவில்லை என்று ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும் மூன்று சடலங்களை கடந்த ஞாயிறன்று கண்டதாக ரொய்ட்டர்ஸ் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார். இதில் கைகள் கட்டப்பட்ட நிலையில் ஒரு சடலமும் இரு சடலங்கள் கைகள் கட்டப்படாத நிலையில் இருந்ததோடு தலையில் துப்பாக்கிக் காயங்கள் இருந்ததாக கூறப்படுகிறது.

கடந்த ஒரு மாத கலமாக ரஷ்ய ஆக்கிரமிப்பில் இருந்த புச்சா நகரில் இருந்து கடந்த வாரம் ரஷ்யப் படை பின்வாங்கியது. அங்கு மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக நகர மேயர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் போர் ஆரம்பித்தது தொடக்கம் அதன் பாதிப்பை இதுவரை 3,455 பொதுமக்கள் அனுபவித்துள்ளதாக மனித உரிமைகளுக்கான ஐ.நா அமைப்பு தெரிவித்துள்ளது.

இதில் 1,400 க்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் 2,000 க்கும் மேற்பட்ட காயம் அடைந்தவர்கள் அடங்குவர். இந்த எண்ணிக்கை கொஞ்சம் பழையதுதான் என்றாலும் உண்மையான புள்ளிவிவரங்கள் கணிசமாக அதிகமாக இருக்கலாம் என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

## ஈக்வடோர் சிறை கலவரம்: இருபது பேர் உயிரிழப்பு



தெற்கு ஈக்வடோர் சிறை ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கலவரத்தில் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அந்த நாட்டு சிறைகளில் இடம்பெறும் வன்முறைகளின் தொடர்ச்சியாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

'உயிரிழந்த 20 பேரின் உடல்களும் குயென்கா நகரில் தடயவியல் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன' என்று ஜனாதிபதி கிலெர்மோ லசோவின் ஊடக அலுவலகம் தெரிவித்துள்ளது.

குயென்காவில் உள்ள எல் டூரி சிறையில் ஏற்பட்ட இந்த மோதலில் ஐந்து கைதிகளின் உடல்கள் சிதைக்கப்பட்டுள்ளன என்று உள்துறை அமைச்சர் பட்ரிசியோ கரிலோ தெரிவித்துள்ளார். தற்போது இந்தக் கலவரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

சிறைச்சாலைகளில் ஏற்படும் வன்முறைகளை கட்டுப்படுத்த ஈக்வடோர் அண்மைய ஆண்டுகளில் போராடி வருகிறது. பொதுவாக குற்றக் கும்பல்களுடன் தொடர்புட்ட இந்த கலவரங்களில் 2021 இல் 320 கைதிகள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கலிபோர்னியாவில் துப்பாக்கி சண்டை: அறுவர் உயிரிழப்பு



அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத் தலைநகர் சக்ரமன்டோவில் துப்பாக்கிச் சண்டை ஒன்றில் ஆறு பேர் கொல்லப்பட்டு மேலும் 12 பேர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உணவு விடுதிகள் மற்றும் மதுபானக் கடைகள் நிரம்பிய பகுதி ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை திடீரென்று இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டை அடுத்து மக்கள் சிதறியடித்து ஓட ஆரம்பித்தனர்.

பெரும் கூட்டத்திற்கு மத்தியில் இந்த துப்பாக்கிச் சூட்டுக்கு எதிராக பொலிஸார் பதில் நடவடிக்கை எடுத்ததாக பொலிஸ் தலைவர் கதரின் லெஸ்டர் தெரிவித்துள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

சம்பவம் நடப்பதற்கு முன்னதாக அங்கு பெரிய சண்டை நடந்ததாகவும் அப்போது பலர் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாகவும் பொலிஸ் தலைவர் கூறினார். உயிரிழந்தவர்களில் மூன்று ஆண்கள் மற்றும் மூன்று பெண்கள் உள்ளனர்.

சக்ரமன்டோ பகுதியில் உள்ள மருத்துவமனைகளில் 12 பேர் சிகிச்சை பெறுகின்றனர். அவர்களில் சிலர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர் என்று நகர மேயர் குறிப்பிட்டார். சம்பவம் குறித்த தகவல்கள் இன்னும் உறுதிசெய்யப்படவில்லை.

தற்கொலைகள் உட்பட, அமெரிக்காவில் ஓர் ஆண்டில், துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய சுமார் 40,000 மரணங்கள் பதிவாகின்றன.

## சீனா ஊடகங்களின் மூலமாக கருத்து மாற்றத்திற்கு முயற்சி



சர்வதேச சந்தைகளில் சீன ஊடக வலையமைப்புகளை விரிவுபடுத்துவதன் மூலம் சீனா பற்றிய சர்வதேச கருத்துகளில் செல்வாக்கு செலுத்துவதற்கு அந்த நாடு நடவடிக்கை எடுத்திருப்பதாக ஊடகவியலாளர்களின் சர்வதேச கூட்டமைப்பின் புதிய ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய ஆண்டுகளில் சீனா தனது இருப்பை வலுப்படுத்தி இருக்கும் கென்யா, பெரு மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுடன் இந்தக் கூட்டமைப்பு மேற்கொண்ட சர்வதேச புள்ளிவிபரம் அடிப்படையிலேயே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'ஊடக ஈடுபாடு மற்றும் செல்வாக்கு என்பது ஒரு புதிய மூலோபாயம் அல்ல. பல சர்வதேச சக்திகளினால் மேற்கொள்ளப்படும் பிரபல கருவியாக அது தொடர்ந்து உள்ளது. ஆனால் சர்வதேச சகாக்களுடன் ஒப்பிடும்போது, சீனாவின் அணுகுமுறை தனித்தன்மை வாய்ந்ததாக மற்றும் கணிக்க முடியாத மையங்களுக்கு உட்பட்டுள்ளது' என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஹொங்கொங் தலைவர் கேரிலாம் விலக முடிவு



ஹொங்கொங் தலைமை நிர்வாகி கேரி லாம் அடுத்த மாதம் நடைபெறும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்துள்ளார். ஹொங்கொங் தேசிய டீ.வி.பி தொலைக்காட்சி அதனைத் தெரிவித்தது.

தலைமைச் செயலாளர் ஜோன் லீ பதவி விலகி, தலைமை நிர்வாகி பதவிக்குப் போட்டியிடுவார் என்றும் அந்தத் தொலைக்காட்சி தெரிவித்தது.

ஜோன் லீ இதற்குமுன் ஹொங்கொங் காவல்துறையில் துணை ஆணையராகப் பணியாற்றியவராவார். 2019ஆம் ஆண்டு ஹொங்கொங்கில் நடந்த வன்செயல் நிறைந்த ஆர்ப்பாட்டங்களின்போது அவர் அந்தப் பொறுப்பில் இருந்தார்.

கடந்த ஜூன் மாதம் நடந்த அமைச்சரவை மாற்றத்தின்போது ஜோன் லீ ஹொங்கொங்கின் இரண்டாவது முக்கியப் பதவியான தலைமைச் செயலாளர் பொறுப்புக்கு வந்தார்.

தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ஹொங்கொங்கில் நடைமுறைப்படுத்துவதில் தீவிரமாகச் செயல்பட்ட அவருக்கு பெய்ச்சிங்கின் ஆதரவு இருப்பதாக கூறப்படுகிறது.

## பாகிஸ்தானில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டோர் ஆர்ப்பாட்டம்



பாகிஸ்தான், ரொண்டு பள்ளத்தாக்கில் கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் அரசின் அலட்சியப் போக்கைக் கண்டித்து கில்கிட் பகுதியில் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளனர்.

ரொண்டு பள்ளத்தாக்கு, கில்கிட்–பால்டிஸ்தான் ஆகிய பிரதேசங்களில் கடந்த டிசம்பரில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் பின்னர் மார்ச் 16 ஆம் திகதி மீண்டும் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக 200 க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதோடு பலர் காயமடைந்துமுள்ளனர். இந்நிலநடுக்கத்தின் விளைவாகப் பலர் வீடுகளை இழந்து தற்காலிக கூடாரங்களில் தங்கியுள்ளனர்.

அதிகாரிகளிடம் பலமுறை சென்றும், அவர்கள் எமது பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக இல்லை. அதனால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிராபத்தை எதிர்நோக்கியுள்ளனர். கில்கிட், பால்டிஸ்தான் மக்கள் அரசாங்கம் எப்போதும் தங்கள் பிரச்சினைகளை வேண்டுமென்றே புறக்கணித்து அலட்சியப் போக்குடன் செயற்படுவதாக உள்ளூர் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ஷங்காய் நகரில் 26 மில்லியன் மக்களுக்கு கொவிட் சோதனை



சீனாவின் ஷாங்காய் நகரில் கொரோனா பெருந்தொற்று அதிகரித்து வரும் நிலையில், அந்நகரில் வாழும் 26 மில்லியன் மக்களுக்கு கொவிட் பரிசோதனை செய்ய ஆயிரக்கணக்கான சுகாதார பணியாளர்கள் மற்றும் இராணுவத்தினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சீன இராணுவம் சார்பில் வெளியாகும் நாளிதழின் செய்தியின் படி, 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவ மருத்துவர்கள், இராணுவ படையினர் உட்பட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுகாதார பணியாளர்கள் ஷாங்காய் நகருக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி ஷாங்காயில் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் நிலையில், மக்கள் அனைவரும் வீட்டிலேயே இருக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஷங்காய் நகரில் கடந்த மார்ச் 28 ஆம் திகதி தொடக்கம் இரண்டு கட்டமாக பொது முடக்கம் அமுலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹங்கேரி பொதுத் தேர்தலில் ஓர்பானுக்கு மீண்டும் வெற்றி



ஹங்கேரி பொதுத் தேர்தலில் அந்நாட்டின் தேசியவாத பிரதமரான விக்டோர் ஓர்பான் தனது நான்காவது தவணைக்கு பெருவெற்றி பெற்றுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தேர்தலில் அவரது வலது சாரி கட்சியான பிடெஸ் 53.1 வீத வாக்குகளை வென்றிருப்பதாக ஆரம்பக்கட்ட தேர்தல் முடிவுகள் தெரிவித்துள்ளன. பீட்டர் மார்கிசேய் தலைமையிலான எதிர்க்கட்சிக் கூட்டணி 35 வீத வாக்குகளை வென்றுள்ளது. ஓர்பான் தனது வெற்றி உரையில், பிரசெல்ஸ் அதிகாரத்துவத்தை சாடியதோடு உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கியை தமது எதிரியாக குறிப்பிட்டார்.

ஹங்கேரி, உக்ரைனுடன் எல்லையை பகிர்ந்துகொள்ளும் நிலையில், உக்ரைனுக்கான ஆயுத பாரிமாற்றத்திற்கு ஓர்பான் தடை விதித்திருப்பதற்கு செலென்ஸ்கி தொடர்ந்து அவரை சாடி வருகிறார்.

ரஷ்யாவுடன் நெருக்கம் கொண்ட ஓர்பான், ரஷ்யாவின் உக்ரைன் படையெடுப்பை கண்டித்துள்ளார். இந்தப் போரினால் அரை மில்லியன் உக்ரைனியர்கள் ஹங்கேரியில் தஞ்சமடைந்துள்ளனர்.

## கொஸ்டாரிகாவில் ஜனாதிபதியாக பொருளியலாளர் சாவேஸ் தேர்வு



கொஸ்டாரிகா ஜனாதிபதி தேர்தலில் பொருளியலாளரான ரொட்ரிகோ சாவேஸ் வெற்றிபெற்றிருப்பதாக ஆரம்ப முடிவுகள் காட்டுகின்றன.

இந்த மத்திய அமெரிக்க நாட்டில் சம்பிரதாய கட்சி அரசியலில் அதிர்வை ஏற்படுத்துவதாக 60 வயதான சாவேஸின் அரசியல் பிரவேசம் பார்க்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தத் தேர்தலில் கிட்டத்தட்ட அனைத்து வாக்குகளும் எண்ணப்பட்ட நிலையில் முன்னாள் ஜனாதிபதி ஜோஸ் மரியா பிகெரெஸை விடவும் அவர் ஐந்து வீத வாக்குகளால் முன்னிலை பெற்றுள்ளார்.

கொஸ்டாரிகாவில் மோசமடைந்துள்ள பொருளாதாரம் தொடர்பில் மக்கள் அதிருப்தி அடைந்திருக்கும் சூழலில், கடந்த பல தசாப்தங்களில் இல்லாத அளவுக்கு வாக்குப் பதிவு குறைந்து காணப்பட்டது.

வெற்றி பெற்றிருக்கும் சாவேஸ் அரசியலுக்கு முழுமையாக புதிதானவர் அல்ல. அவர் வெளியேறும் அரசில் ஆறு மாதங்கள் பொருளாதார அமைச்சராக செயற்பட்டவராவார். கொஸ்டாரிகாவில் மக்கள் தொகையில் 23 வீதத்தினர் வறுமையில் வாழ்கின்றனர்.

## இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதியுடன் சந்திப்பு



நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து உரையாடியபோது...

## ரயில் சேவைகள் இன்று முதல் வழமைக்கு

ரயில்வே பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் காரணமாக குறைக்கப்பட்டிருந்த ரயில்சேவைகள் இன்று முதல் வழமைக்குத் திரும்புமென ரயில்வே பொதுமுகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த காலத்திலும் நேற்றைய தினமும் 50 வீதமான ரயில்சேவைகளே இடம்பெற்றன எனத் தெரிவித்த அவர், ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை தளர்த்தப்பட்ட போது ரயில்வே சாரதிகள் உரிய வேலைத்தளங்களுக்கு வந்துசேர்வதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாகவே நேற்றைய தினம் 50 வீதமான ரயில் சேவைகள் இடம்பெற்றன. இன்று காலை முதல் அனைத்து ரயில்சேவைகளும் வழமைக்குத் திரும்பும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ரமழான் சிந்தனை

### இறையச்சத்தின் மகத்துவம்

அல்லாஹ்தஆலா தன் அருள்மறையாம் அல் குர்ஆனில் 'நோன்பு நோற்பதன் மூலம் இறையச்சம் அடைந்து கொள்ளலாம்' (2:183) என்று குறிப்பிட்டிருக்கின்றான். இதன் ஊடாக நோன்புக்கும் இறையச்சத்திற்கும் உள்ள தொடர்பு தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

மனிதனுக்கு இறையச்சம் மிகவும் இன்றியமையாதது. இறையச்சத்தைக் கொண்டு மனிதர்களை வழி நடாத்தும் மார்க்கமே இஸ்லாம். அந்த வகையில் இஸ்லாத்தில் முக்கியத்துவம் இடத்தைப் பெற்றுள்ளது இறையச்சம்.

இறையச்சமானது உள்ளத்தை விழிப்படையச் செய்யும். அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு அவனது திருப்திக்கு முன்னுரிமை அளிக்க வழிவகை செய்யும்.

அதேநேரம் பாவங்களால் உள்ளம் கலங்கப்பட இடமளிக்காமல் பாதுகாக்கும். அல் குர்ஆனுடன் நெருக்கமான தொடர்பைப் பேணி அதன் நிழலில் வாழ்பவர்கள் அல்லாஹ்விடம் இறையச்சத்தின் மதிப்பையும் அந்தஸ்தையும் நன்கறிவர். அவர்களது ஆன்மாக்கள் இறையச்சத்தின் இலட்சத்தை அடைந்துகொள்ளவே விரும்பும். அதன் பக்கம் கொண்டு சேர்ப்பதற்கான பாதையாகவும் விளங்குகின்றது இறையச்சம்.

இந்த இறையச்சத்தின் சிறப்பையும் மகத்துவத்தையும் அற்கேயுரிய ஒழுங்கில் அறிந்து கொள்ளும் எவரும் அதனை அடைந்திடவே விரும்புவர்

இறையச்சத்தை அடைந்து கொள்ளும் மனிதனின் வாழ்வொழுங்கு இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்ப அமைந்துவிடும். அது அல்லாஹ்வின் கட்டளைக்கும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கும் இயையபான வாழ்வாக இருக்கும். இவ்வாறு வாழ்வொழுங்கை அமைத்துக் கொள்ளும் மனிதனின் தனிப்பட்ட வாழ்விலும் குடும்ப, சமூக வாழ்விலும் அமைதி சமாதானம் தலைத்தோங்கும்.

அவ்வாறு மகத்துவம் மிக்க இறையச்சத்தைப் பெற்றுக்கொள்வதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு நோன்பு சிறந்த ஏற்பாடாக விளங்குகின்றது.

ஆகவே இந்த ரமழான் நோன்பு காலத்தை இறையச்சத்தை அடைந்து கொள்வதற்கு ஏற்ப நோன்பு நோற்று இறைவணக்கங்களின் ஊடாக ஒழுங்கமைத்து கொள்ள முயற்சிப்போம். அதன் ஊடாக அல்லாஹ்வின் அன்பையும் கருணையையும் அடைந்திடுவோம்.

மர்லின் மரிக்கார் ...

இலங்கையின் பொருளாதார நெருக்கடி

## பாரத பிரதமர் நரேந்திர மோடியுடன் அமைச்சர் ஜெய்சங்கர் ஆலோசனை

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி குறித்து இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தினார்.

கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருள், உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து இலங்கை மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த வாரம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், ஜனாதிபதி





கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை சந்தித்து பொருளாதார பிரச்சினை குறித்து கலந்துரையாடினார்.

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடியை திங்கட்கிழமை சந்தித்த ஜெய்சங்கர், இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் பாகிஸ்தானின் அரசியல் சூழல் குறித்தும் ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையில் தற்போது நிலவி வரும் இலங்கை பிரச்சினை குறித்து விரிவாக பிரதமர் நரேந்திர மோடியிடம் வெளியுற துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் எடுத்து கூறியதாக தெரிவிக்கப்பட்டது.

## அவசரகாலச் சட்டம் தொடர்பில் EU அதிருப்தி

உத்தியோகபூர்வ டுவிட்டரில் பதிவு



அவசரகாலச் சட்டம் மற்றும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளது.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டு, ஐரோப்பிய ஒன்றியம் இவ்வாறு அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

மேலும் இலங்கை மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் நிலைமையை ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமாகக் கண்காணித்து வருவதாகவும் அப்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவசர நிலைமை ஏற்பட்டுள்ளமை இலங்கை மக்களுக்கேயன்றி அரசாங்கத்திற்கு அல்ல. மக்கள் எதிர்கொண்டுள்ள அவசரகால நிலைமையின் அடிப்படையிலேயே அவர்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர். மாறாக அவர்கள் வீதிக்கு இறங்கியமையால் அவசரகால நிலைமை ஏற்படவில்லை என்றும் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் தனது பதிவில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மிரிஹான ஆர்ப்பாட்டத்தின்போது

## பஸ்ஸுக்கு தீ வைத்த நபரை தேடும் பொலிஸ்

பொதுமக்களின் உதவியையும் நாடுகிறது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மிரிஹான பகுதியில் அண்மையில் இடம்பெற்ற குழப்பகரமான சம்பவங்களின் போது பஸ்ஸுக்கு தீ வைத்த சந்தேக நபரை கைதுசெய்வதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பை கோருவதாக குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த நபரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டு வரும்நிலையில் அதுதொடர்பில் தகவலறிந்த பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு அந்தத் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

06



## சகல பிரச்சினைகளுக்கும் ஒரு வார காலத்தினுள் தீர்வு

எஸ்.எம்.சந்திரசேன MP தெரிவிப்பு



நாட்டில் தற்போது தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு இவ்வார காலத்திற்குள் அரசாங்கம் தீர்வு பெற்றுக்கொடுக்கும் என தெரிவித்த காணி விவகாரத்துறை அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, போராட்டங்களால் அரசாங்கத்தை ஒருபோதும் வீழ்த்த முடியாது. அரசியல்வாதிகளின் தவறான வழிநடத்தல்களினால் போராட்டம் தீவிரமடைகிறது எனவும் தெரிவித்தார்.

அனுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார ரீதியில் நாட்டு மக்கள் பல சிக்கல்களை எதிர்க்கொண்டுள்ளார்கள் என்பதை அரசாங்கம் ஒருபோதும் மறுக்கவில்லை.

எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சாரம் ஆகிய சேவைத்துறையில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைக்கு தீர்வு காணுமாறு உரிய தரப்பினருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதுடன்,அவை தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.இவ்வாறான நிலையில் ஒரு தரப்பினர் நாட்டு மக்களை வீதியிலிறக்கி அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை திட்டமிட்டு முன்னெடுத்து வருகிறார்கள்.

போராட்டங்களினால் அரசாங்கத்தை ஒருபோதும் வீழ்த்த முடியாது.

சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு இவ்வார காலத்திற்குள் தீர்வு காண அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.சேதன பசளை கொள்கை திட்டத்தை விரைவாக மாற்றியமைக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம்.

06

## மிரிஹான ஆர்ப்பாட்டத்தில் கைதான சந்தேக நபர் எவரும் உயிரிழக்கவில்லை!

பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவிப்பு

மிரிஹான பிரதேசத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது காயமடைந்து களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளதாக சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மார்ச் 31 ஆம் திகதி மிரிஹான பொலிஸ் பிரிவில் – பெங்கிரிவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவத்தின்போது கைது செய்யப்பட்ட சந்தேகநபரொருவர் உயிரிழந்துள்ளதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. அன்றைய தினம் பொலிஸ் உத்தியோகத்தர்களினால் கைது செய்யப்பட்டு களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் எந்தவொரு சந்தேக நபரும் உயிரிழக்கவில்லை. எனவே இவ்வாறு வெளியாகும் போலியான செய்திகளை நம்பி ஏமாற வேண்டாம் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது.

## வடக்கில் கண்ணி வெடி அகற்ற ஜப்பான் ரூ. 120 மில்லியன் நிதி



இலங்கையின் வட பிராந்தியத்தில் கண்ணி வெடி அகற்றும் மனித நேய செயற்பாட்டுக்காக அந்நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்தியுள்ள Skavita Humanitarian Assistance and Relief Project (SHARP) அமைப்புக்கு 604,412 அமெரிக்க டொலர்களை (சுமார் ரூ. 120 மில்லியன்) வழங்க ஜப்பானிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

இந்த நிதி வழங்கலுக்கான உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு கடந்த 25ஆம் திகதி, கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதுவரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது. இந்த உடன்படிக்



கையில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி மற்றும் SHARP அமைப்பின் பணிப்பாளரும்/கள அறிக்கையிடல் அதிகாரியுமான மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) சுமதி ரஞ்ஜன் பாலசூரிய ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இதுவரையில் ஜப்பானின் Grassroots Human Security Project (GGP) ஊடாக பகிரப்பட்டிருந்த நிதியைக் கொண்டு 1.9 கன கிலோ மீற்றருக்கும் அதிகமான கண்ணி வெடி காணப்பட்ட பகுதி SHARP இனால் விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டுக்கான செயற்திட்டத்தினூடாக, இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் கண்ணி வெடி ஆபத்து காணப்படும் பகுதிகளை விடுவித்து, சுமார் 2000 இடம்பெயர்ந்து

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 216.63 | 227.03 |
| கனடியன் டொலர் | 231.34 | 241.52 |
| யூரோ | 323.18 | 334.50 |
| ஜப்பான் யென் | 2.3659 | 2.4363 |
| சிங்கப்பூர் டொலர் | 214.36 | 222.57 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 380.53 | 394.92 |
| சுவிஸ் பிராங்க் | 312.87 | 325.88 |
| அமெரிக்க டொலர் | 289.72 | 299.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 824.47 | கட்டார் ரியால் | 85.20 |
| குவைத் டினார் | 1,021.81 | சவூதி ரியால் | 82.86 |
| ஓமான் ரியால் | 807.41 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 84.63 |

தினகரன்
THINAKARAN தினகரன்
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
பிலவ வருடம் பங்குனி மாதம் 22ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 03

**குறள் தரும் சிந்தனை**

மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே ஒற்று

மற்றவர்கள் மறைவாகக் கூடிச் செய்யும் காரியங்களை, அவர்களுடன் இருப்பவர் வாயிலாகக் கேட்டறிந்து அவற்றின் உண்மையைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதே உளவறியும் திறனாகும்.

# தேசிய நெருக்கடிக்கு தீர்வு காண ஒன்றுபட வேண்டிய தருணம்

'தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள தேசிய நெருக்கடிக்கு தீர்வு காண ஒன்றிணையுமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று அழைப்பு விடுத்துள்ளார்.

இது காலத்திற்கு அவசியமான அழைப்பாகும். மக்கள் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படும் எந்தவொரு அரசியல் தலைவரும், நெருக்கடியான சூழலில் விடுக்கும் அழைப்பு இவ்வாறே அமைந்திருக்கும். அதனையே ஜனாதிபதியின் இந்த அழைப்பும் பிரதிபலிப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கொவிட் 19 தொற்றின் விளைவாக நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சவாலினால் எரிபொருள் தட்டுப்பாடு, அந்நிய செலவணி பற்றாக்குறை, பொருட்களின் விலையேற்றம் என்றபடி பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இப்பொருளாதார நெருக்கடியானது தனியே ஒரு தரப்பினருக்கோ அல்லது ஒரு பிரதேசத்திற்கோ மாத்திரமுரியதல்ல. மாறாக முழுநாட்டு மக்களுமே இந்நெருக்கடியின் அசௌகரியங்களுக்கும் சிரமங்களுக்கும் முகம் கொடுத்துள்ளனர்.

இப்பொருளாதார நெருக்கடியைத் தணித்து அது மக்களுக்கு சுமையாக அமைவதைத் தவிர்ப்பதற்காகப் பல்வேறு வேலைத்திட்டங்களை ஆரம்பம் முதல் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. இருந்தும் கூட நாட்டின் எல்லா மட்ட மக்களையும் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கு இந்நெருக்கடிகள் உள்ளாக்கவே செய்துள்ளன. அதன் காரணத்தினால் இந்நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு மக்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சூழலில் இத்தேசிய நெருக்கடிக்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து தீர்வு தேட வழி செய்யும் வகையில் அரசாங்கத்தின் அமைச்சர்கள் தம் அமைச்சுப் பதவிகளை நேற்று முன்தினமிரவு உடனடியாக இராஜிநாமா செய்துள்ளனர். இந்த நிலையில்தான் நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி, தேசிய நெருக்கடிக்கு தீர்வு காண ஒன்றிணையுமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

இது கட்சிகளாகப் பிரிந்து நின்று தீர்வு தேடக் கூடிய நெருக்கடி அல்ல. எல்லாக் கட்சிகளும் அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்படவும் முகம் கொடுக்கவும் வேண்டிய விடயம் இது.

ஆசியாவின் முன்னணி ஜனநாயக நாடுகளில் ஒன்றாக விளங்கும் இலங்கை முகம் கொடுத்திருக்கும் இந்நெருக்கடிக்கு ஜனநாயகக் கட்டமைப்புக்குள்ளேயே தீர்வு காணப்பட வேண்டும். இதன் நிமித்தம் அனைத்து தரப்பினரும் ஒன்றுபட்டு செயற்படுவது அவசியம்.

அது நாட்டுக்கும் அனைத்து குடிமக்களுக்கும் மாத்திரமல்லாமல் இந்நாட்டின் எதிர்கால சந்ததியினருக்காகவும் ஆற்றும் பாரிய சேவையாக அமையும்.

அதற்கு ஜனாதிபதியின் இந்த அழைப்பை நல்ல வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டியது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளின் பொறுப்பாகும். மேலும் நாடு தற்போது முகம் கொடுத்துள்ள நெருக்கடியானது கட்சி ரீதியாகப் பிரிந்து நின்று தீர்வு தேடக் கூடிய ஒன்றல்ல என்பதை உணர்ந்து, பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைப் கொண்டிருந்தும் கூட, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் எல்லா அமைச்சர்களும் தம் பதவிகளை இராஜிநாமா செய்து பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து இப்பிரச்சினைக்கு தீர்வு தேட வழிவகை செய்துள்ளனர். இதன் ஊடாக ஸ்ரீ.ல.பொ. பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் தம் தேசிய அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் நாட்டினதும் மக்களினதும் நலன்களைக் கருத்தில் கொண்டு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் நாடு எதிர்கொண்டுள்ள தேசிய நெருக்கடிக்கு தீர்வு தேடுவதற்கு பங்களிக்க முன்வருவது காலத்தின் அவசியத் தேவையாகும். இது அற்ப அரசியல் இலாபம் தேடுவதற்கான நேரமல்ல.

ஆகவே தற்போது நாடு முகம் கொடுத்துள்ள தேசிய நெருக்கடிக்கு தீர்வு தேடவென அனைத்து கட்சிகளும் ஒன்றுபட்டு செயற்படுவது அவசியம். மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி விடுத்துள்ள அழைப்பை அதற்கான சிறந்த வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது நாட்டினதும், மக்களினதும் எதிர்கால சந்ததியினரதும் சுபிட்சத்திற்காக அளிக்கும் பாரிய பங்களிப்பாகவும் சேவையாகவும் அமையும் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# கொட்டாஞ்சேனை அருள்மிகு முத்துமாரியம்மன் தேவஸ்தான கும்பாபிஷேக பெருவிழா நாளை

எச்.எச். விக்ரமசிங்க

கொட்டாஞ்சேனை அருள்மிகு முத்துமாரியம்மன் தேவஸ்தான கும்பாபிஷேகப் பெருவிழா பூர்வாங்க கிரிகைகள் ஏப்ரல் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நேற்றுகாலை 8 மணிமுதல் பெருந்தொகையான பக்தர்கள் கலந்து கொண்டு எண்ணெய் சாத்தி வழிபட்டனர். இன்றும் மாலை 5 மணி வரை பக்தர்கள் எண்ணெய் சாத்துவதற்கு ஆலய அறங்காவலர்கள் சகல ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள்.

நாளை 6ஆம் திகதி(புதன்கிழமை) கணபதிபூஜை, யாகபூஜை, ஹோமம், கமாபூர்னாகுதி, தீபாராதனை சர்வாஞ்சலி, தானங்கள், பலிகள் கும்பப்பிரதஷணம் ஆகியன நடைபெற்று 9:30 முதல் 10 மணி வரை கும்பாபிஷேகம் நடைபெறும்.

சுன்னாகம் ஸ்ரீ கதிர்மலைச் சிவன்கோவில் 'முத்தமிழ் குருமணி' சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் சிவஸ்ரீ மு. ரவிபாஸ்கரக் குருக்கள், ரம்மஸ்ரீ பரமானந்த சனாதனசர்மா, சிவாகம பூஷணம் பிரம்மஸ்ரீ விக்னேஷ் சிவாச்சாரியார் ஆகியோருடன் ஆலய தேவஸ்தான குருமார்களான சிவஸ்ரீ பாலகணேஷ் குருக்கள், பிரம்மஸ்ரீ சண்முகானந்தா குருக்கள், பிரம்மஸ்ரீ எஸ். சுரேஷ்குமார் சர்மா, பிரம்மஸ்ரீ வி. ஞானசேகர சர்மா மற்றும் இளஞ்சுடர்களான கே. துஷாந்தன், ரா. நவின்குமார் ஆகியோரின் மங்கள இசையுடன் கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறுகின்றது. ஆலய அறங்காவலர் சபையைச் சேர்ந்த டொக்டர் எம். ராமசுப்பு , எஸ். செல்வரட்ணம்,எம். வடிவேல், எஸ். ரி. சிவகுமார், எஸ். முத்துராமலி ங்கம் ஆகியோரின் பெருமுயற்சியினாலும் பக்தர்களின் அனுசரணையாலும் சிறப்பாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஆலய புனருத்தாரண நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் ஏற்கனவே உள்ள அமைப்புகள் புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன் புதிதாகவும் சிலபரிவார மூர்த்திகள் அமைக்கப்பட்டுள்ளன.



**முத்துமாரியம்மன் ஆலய சிவாச்சாரியார்கள்**






**முத்துமாரியம்மன் ஆலய அறங்காவலர்கள்**







கேதீஸ்வரன் துஷாந்தன்

ராஜநாயகம் நவீன்குமார்

## பாதுகாப்புப் படையினரின் வகிபாகம்;

# பாதுகாப்பு ஆலோசகர்கள் / இணைப்பாளர்களுக்கு இராணுவ தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா விளக்கம்




தொழில் தகைமை மிகுந்ததாக விளங்கும் இலங்கை இராணுவம் வேறு நோக்கங்களின்றி அரசியலமைப்புக்கு இணங்கவே செயற்படும் என்று இலங்கையை தளமாக கொண்ட உயர்ஸ்தானிகராலயங்கள் மற்றும் தூதரகங்களின் பாதுகாப்பு இணைப்பாளர்கள் / ஆலோசகர்களுடன் நேற்று (4) நடைபெற்ற சந்திப்பில் பாதுகாப்பு பதவிநிலை பிரதானியும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா தெளிவுபடுத்தினார்.

பாதுகாப்பு ஆலோசகர்கள்/ இணைப்பாளர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் நாட்டின் தற்போதைய நி லைவரம் தொடர்பில் இங்கு தெளிவூட்டப்பட்டது.



அவுஸ்திரேலிய பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் இயன் கீத் கெய்ன், பங்களாதேஷ் பாதுகாப்பு ஆலோசகர் கொமாண்டர் எம் ஷபில் பாரி, சீன இராணுவ, கடற்படை, விமானப் படை பாதுகாப்பு இணைப்பாளர் சிரேஷ்ட கேர்ணல் வான் டோங், சீன இராணுவ, கடற்படை, விமானப் படை உதவி பாதுகாப்பு இணைப்பாளர் லெப்டினன்ட் கேர்ணல் சாங் கியான்ஜின், இந்திய பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் விகாஸ் சூட், இந்திய உதவி பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ற் கேர்ணல் பன்னெட் சுஷில், ஈரான் இராணுவ பாதுகாப்பு இணைப்பாளர் கேர்ணல் ஹோமாயு அலி யாரி, ஜப்பான் பாதுகாப்பு இணைப்பாளர் கப்டன் ககு புகெளரா, மாலைதீவுகள் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் இஸ்மாயில் நசீர், பாகிஸ்தான் பாதுகாப்பு ஆலோசகர் கேணல் முஹம்மது சப்தர் கான், ரஷ்ய இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படை பாதுகாப்பு இணைப்பாளர் கேர்ணல் அலெக்ஸி ஏ பொண்டரேவ், ஐக்கிய இராச்சிய பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் பிஜே கிளேட்டன், ஐக்கிய அமெரிக்க கடற்படை பாதுகாப்பு இணைப்பாளர் லெப்டினன் கொமாண்டர் ரிச்சர்ட் லிஸ்டர் ஆகியோரும் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

# மோசமான நெருக்கடியை நோக்கி செல்லும் இந்திய பொருளாதாரம்!

தேர்தல் காலங்களில் அறிவிக்கப்படும் ஜனரஞ்சக மற்றும் இலவசத் திட்டங்கள் குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் மத்திய அரசின் உயர்மட்ட அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். தேர்தலில் மக்கள் வாக்குகளைப் பெற பல்வேறு கட்சிகளும் இலவசத் திட்டங்கள் அறிவிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளன.

இந்த இலவசத் திட்டங்கள் குறித்து இரு வேறான கருத்துகள் உள்ளன. தேர்தல் காலங்களில் அறிவிக்கப்படும் இலவசத் திட்டங்கள் குறித்து நீதிமன்றங்களில் கூட வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இந்தச் சூழலில் ஜனரஞ்சக மற்றும் இலவசத் திட்டங்கள் குறித்து பிரதமர் மோடியிடம் மத்திய அரசின் உயர்மட்ட அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த சனிக்கிழமை பல்வேறு துறைகளின் செயலாளர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார். இந்தச் சந்திப்பில் பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன. குறிப்பாக பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்தப்படும் இலவசத் திட்டங்கள் குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டது. இலவசத் திட்டங்களின் போக்கைக் கட்டுப்படுத்தாமல் இருந்தால், சில மாநிலங்களில் இலங்கை நாட்டில் ஏற்பட்டது போன்ற பொருளாதார நெருக்கடி ஏற்பட வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் எச்சரித்தனர்.

நாட்டின் பல மாநிலங்கள் ஆபத்தான நிதிநிலையில் இருப்பதாகவும், அவை இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்திருக்கா விட்டால் எப்போதே 'திவால்' ஆகியிருக்கும் என்றும் செயலாளர்கள் எச்சரித்துள்ளனர். இது குறித்து உடனடியாக தீர்வுகள் காணப்பட வேண்டும் என்றும் அதிகாரிகள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்தனர். பல்வேறு மாநிலங்களில் வழங்கப்படும் இலவச மின்சாரம் என்பது அரசுக்குக் கூடுதல் சுமையை ஏற்படுத்துவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற முக்கிய திட்டங்களுக்கு அரசால் அதிக நிதி ஒதுக்க முடிவதில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சத்தீஸ்கர் மற்றும் ராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் பழைய ஓய்வூதிய முறைக்கு மாறியுள்ளது பொருளாதார ரீதியில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்று குறித்து மத்திய அரசு அதிகாரிகளும் கவலைப்படுகிறார்கள். இருப்பினும் இது தொடர்பாகக் கூட்டத்தில் விவாதிக்கப்படவில்லை. ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் இலவசத் திட்டங்கள் குறித்த அரசியல் கட்சிகளின் அறிவிப்புகள் நீண்ட கால நோக்கில் மத்திய, மாநில அரசில் கடுமையான நிதி பாதிப்பை ஏற்படுத்தும் என்று அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

# கல்விப் புலத்தினுள் தன்னடக்கம் நிறைந்த பேராசிரியர் சந்திரசேகரம்

பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்களை முதன் முதலில் சந்திக்கும் எவருக்குமே பெரும் வியப்பு ஏற்படுவதுண்டு. மாபெரும் கல்விமான் ஒருவரிடம் இத்தனை பணிவும் தன்னடக்கமும் எவ்வாறு குடிகொண்டன என்பதுதான் அந்த வியப்பு.

அவர் கல்வியில் ஒரு கடலாகத் திகழ்ந்தார். கல்விமான் ஒருவரிடம் இத்தனை எளிமையைக் காண்பது மிகவும் அரிது. பேராசிரியர் சந்திரசேகரனுடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு மாத்திரமே அவரது எளிமையும், தன்னடக்கமும் நன்கு புரியும்.

அவருடன் நெருக்கமும் நட்புறவும் கொண்டுள்ளவர்களில் அநேகமானவர்கள் கல்விமான்களோ, புத்திஜீவிகளோ அல்லர் என்பதுதான் இங்கே வேடிக்கை. அவருடன் சிநேகம் கொண்டிருந்தவர்களில் கற்றறிந்தவர்களும் இருந்தனர். பாமரர்களும் இருந்தனர். அவர்கள் அநேகருக்கும் சமமான மரியாதை கொடுத்து நெருங்கிப் பழகினார் பேராசிரியர் சந்திரசேகரன்.

'கல்வியறிவற்றோரை கல்விமான்கள் சமூகம் தாழ்த்துவது அறிவீனம். கல்விப் புலத்தில் இல்லாத பலரிடம் ஆழமான ஞானம் உள்ளது. அதைப் புரிந்து கொள்வதற்கு கற்றோர் சமூகம் முன்வர வேண்டும். எமது சமூகத்தில் கற்றோருக்கும், பாமரர்களுக்குமிடையே நிலவுகின்ற பாரிய ஏற்றத்தாழ்வு முதலில் நீக்கப்பட வேண்டும்' என்று வெளிப்படையாக அடிக்கடி அவர் பேசுவதுண்டு. அக்கொள்கையை அவர் தனது வாழ்வில் சரியாகவே கடைப்பிடித்து வாழ்ந்தார்.


தன்னை விட வயதில் குறைந்தவர்கள் 'தம்பி' என்று அந்நியோன்யமாக விளிக்கும் பண்பு கொண்டவர் அவர். இல்லையேல் அவர்களின் பெயருக்கு முன்னால் 'மிஸ்டர்' இட்டு அழைப்பார்.

அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுவது மிகவும் இலகுவானது. வேலைப்பளுவுக்கு மத்தியிலும் தொலைபேசி அழைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பார். நிதானமாக உரையாடி விளக்கங்கள் கொடுப்பார். அது நீண்ட உரையாடலாகிப் போவதுண்டு. அவர் கூறும் ஆக்கபூர்வமான தகவல்களை துண்டித்துக் கொள்வதில் எவருக்கும் விருப்பம் இருக்காது.

அவர் ஒரு தகவல் பெட்டகம்; கல்வித்துறை ஊற்று. அதனால் பலரும் அவருடன் அடிக்கடி தொடர்பு கொள்வதுண்டு. அவர்களில் பலதரப்பினரும் அடங்குவர். கல்வி சம்பந்தமாகவோ இல்லையேல் வேறு அவசியமான விடயங்களாகவோ இருக்கலாம். அனைவர் சந்தேகங்களுக்கும் சலிப்பின்றி விளக்கங்கள் அளிப்பார். சிலரது தொலைபேசி அழைப்புகளை தவற விட நேர்ந்தால், தொலைபேசியில் பதிவாகியுள்ள இலக்கத்துடன் அவராகவே தொடர்பு கொண்டு பேசுகின்ற பவ்வியம் அவரிடமிருந்தது.



## தினகரனுடன் அபிமானமும், நெருங்கிய நட்புறவும் கொண்ட கல்விமானின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்!



தினகரன் பத்திரிகைக்கும் பேராசிரியர் சந்திரசேகரம் அவர்களுக்கும் இடையேயான உறவு மிக நீண்டதாகும். தினகரன் பத்திரிகையின் தோற்றம், வளர்ச்சி, எழுச்சி தொடர்பான வரலாற்றை வரிசைக் கிரமமாக ஆதாரங்களுடன் கூறக் கூடியவராக அவர் இருந்தார். தினகரனின் முக்கிய தினங்கள் தொடர்பான சிறப்பு மலர்களுக்கு விசேட ஆக்கங்களை தயார் செய்கின்ற போது, ஆசிரியபீடத்தினால் முதலில் அணுகப்படுபவர் பேராசிரியர் சந்திரசேகரம்.

அதேபோன்று சிறப்புமலருக்கான ஆக்கங்களை முன்கூட்டியே முதலாவதாக எம்மிடம் ஒப்படைத்து விடுபவரும் அவர்தான்.

தினகரனுக்காக அவர் எழுதிய கட்டுரைகள் ஏராளம். பேராசிரியர் ஒருவரிடம் தொலைபேசி வாயிலாக கட்டுரை கோருகின்றோமென்ற சங்கோஜம் எமக்குத் தோன்றுவதுண்டு.

ஆனால் அவரிடம் தற்பெருமையோ, அகம்பாவமோ இருந்ததில்லை. மிக எளிமையான மனிதராக மனமுவந்து தினகரனுக்கான கட்டுரைகளை அவர் தந்து விடுவார்.

தினகரனின் 90 ஆம் வருட கொண்டாட்டங்கள் கடந்த மார்ச் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற வேளையில் சிறப்பு சஞ்சிகையொன்றும் வெளியிடப்பட்டது. பேராசிரியரிடம் சிறப்புக் கட்டுரையொன்று கோரினோம். மறுநாள் காலையில் கட்டுரை தயாராகி விடுமென்றார்.

ஆனால் மறுநாள் காலை 8 எட்டு மணியளவில் அவருடன் தொடர்பு கொண்ட போது, அவர் கட்டுரையை எழுதத் தொடங்கவேயில்லை. அதற்காக மன்னிப்புக் கோரினார். அடுத்த தினம் தந்து விடுவதாகக் கூறினார்.

ஆனால் அரைமணி நேரம் கழிந்ததும் அவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

"இன்னும் அரைமணியில் கட்டுரை தயாராக இருக்கும்" என்றார் சிரிப்பொலியுடன். அதுதான் அவரது தனித்துவ சுபாவம்.

ஏற்கனவே உறுதியளித்தபடி உரிய வேளைக்கு கட்டுரையை முடித்துக் கொடுக்கவில்லையென்ற மனஉறுத்தல் காரணமாக அவர் உடனடியாகவே எழுதத் தொடங்கியிருக்கலாம். இல்லையேல் நட்புறவுடன் சீண்டுகின்ற நகைச்சுவை காரணமாக அவ்வாறு கூறியிருக்கலாம்.

பேராசிரியருடன் உரையாடுகின்ற போது அவரது ஒவ்வொரு பேச்சிலும் நகைச்சுவை கலந்திருக்கும். மற்றவருடனான உரையாடலை சலிப்பின்றி நகர்த்திச் செல்கின்ற உத்தி அவரிடமிருந்தது. அதேநேரம் தன்வசமுள்ள அறிவுபூர்வமான தகவல்களை அடுத்தவருக்கு வலிந்து ஊட்டுகின்ற ஆசானாகவும் அவர் காணப்பட்டார்.

தினகரனை அவர் மிகவும் நேசித்தார். 'ஈழத்து இலக்கியத்தை தோற்றுவித்து வளர்த்த ஒரேயொரு பத்திரிகை தினகரன்' என்று அவர் உறுதியுடன் கூட்டங்கள் பலவற்றில் குறிப்பிட்டிருக்கின்றார். 90 ஆம் ஆண்டு பூர்த்தியை தினகரன் கொண்டாடிய சமயத்தில் அவர் சுருக்கமாக ஒரு கருத்தைக் கூறியது நினைவிருக்கின்றது.

"தினகரனின் வெற்றிப் பயணம் முடிவுற்றது. அப்பயணம் தலைமுறை த லை மு றை ய ா க த் தொடரும்" என்றார் அவர்.

"அரசாங்க ஊடகமாக இருந்து கொண்டு இத்தனை துணிச்சலாக எழுதுகின்றீர்கள். தினகரன் மற்றும் வாரமஞ்சரியின் அத்தனை பக்கங்களும் சிறப்பாக உள்ளன. நான் இனிமேல் தினகரனை தினமும் வாங்கப் போகின்றேன்" என்று கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றி விட்டு, அங்கு வந்திருந்த தினகரன் ஆசிரியபீடத்தினரிடம் அவர் கூறியது ஞாபகமிருக்கின்றது.

பேராசிரியர் சந்திரசேகரன் நேற்று தனது 77 ஆவது வயதில் நம்மை விட்டு மறைந்து விட்டார். அவரது பிரிவுச் செய்தி நெஞ்சில் வலியை ஏற்படுத்தியது. அவரது கல்வித் தகைமைகள், ஆற்றல்கள், பண்புகள் பற்றியெல்லாம் இப்பத்தியினுள் சுருக்கமாக விபரிப்பது இயலாத காரியம். தன் தகுதிகளையிட்டு தற்பெருமை கொள்ளாமல் எளிமையான மனிதராக, எல்லோர்க்கும் நல்லவராக வாழ்ந்தவர் பேராசிரியர்.

சிந்தனையாளராக, அறிஞராக, கல்வியியலாளராக, பல்கலைக்கழக பீடாதிபதியாக, எழுத்தாளராக, மொழிபெயர்ப்பாளராக, பதிப்பாசிரியராக, சிறந்த பேச்சாளராக பன்முக ஆளுமையுள்ளவராக பேராசிரியர் சந்திரசேகரன் விளங்குகிறார்.

அவர் 22. 12.1944 அன்று பதுளை மாவட்டத்தில் பிறந்தார். பதுளை ஊவா கல்லூரி, தெல்லிப்பளை மஹஜன கல்லூரி போன்றவற்றில் கற்ற பின்னர், 1967இல் பேராதனை பல்கலைக்கழகத்தில் பயின்றார். கல்விமாணி பட்டத்தையும், 1977 – 1978 இல் ஜப்பான் ஒசாக்கா அயல்மொழிப் பல்கலைக்கழகத்தில் ஜப்பானிய மொழி, பண்பாட்டு சான்றிதழையும், 1978 – 1980 களில் ஹிரோஷிமா பல்கலைக்கழகத்தில் கல்விமுதுமாணி பட்டத்தையும் பெற்றார்.

பேராசிரியர் சந்திரசேகரம் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவில் உறுப்பினராகவும், மனித உரிமை ஆணைக்குழுவில் கல்வித்துறை சார்ந்த நிபுணத்துவ ஆலோசகராகவும், கொழும்பு பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையத்தில் உறுப்பினராகவும், திறந்த பல்கலைக்கழக கல்விப்பீட சபையில் உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கொழும்பு பல்கலைக்கழக கல்விபீடத்தின் தலைவராகக் கடமையாற்றினார். 1968 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தின் போதனாசிரியராகவும் கடமையாற்றியுள்ளார. மத்திய வங்கியில் மொழிபெயர்ப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். 'வித்தியாநிதி' என்ற தேசிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர் அவர்.

பேராசிரியர் எழுதிய நூல்கள் ஏராளம். இலங்கை இந்தியர் வரலாறு, கல்வியியல் கட்டுரைகள், புதிய நூற்றாண்டுக்கான கல்வி, கல்விச் செயற்பாட்டில் புதிய செல்நெறிகள், உயர்கல்வியில் புதிய செல்நெறிகள், கல்விச் சிந்தனையில் புதிய செல்நெறிகள், இலங்கையில் தமிழர் கல்வி, அபிவிருத்தியும் கல்வியும், கல்வியியல் சிந்தனைகள், மலையக கல்வி_ சில சிந்தனைகள், கல்வி ஒரு பன்முக நோக்கு உட்பட அவர் ஏராளமான நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

வெளிநாடுகளில் நடைபெற்ற கல்வி தொடர்பான மாநாடுகளில் இலங்கையின் உயர் கல்வி, தேசிய கல்வி, மலையகக் கல்வி பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்து சர்வதேச புகழை அவர் பெற்றுக் கொண்டார்.

இலங்கையின் கல்விப்புலத்தில் பேராசிரியர் சந்திரசேகரம் அவர்களின் மறைவு பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

**எஸ். பாண்டியன் ...**

## பண்புக்கு உவமையாக வாழ்ந்த பேராசான்

பேராசான் சந்திர சேகரம்
பெருஞ்சுமையை நெஞ்சேற்றிப்
போனாயோ பெருமகனே!
தமிழினத்தின் ஒளிவிளக்கு
தமிழ்ச்சங்கத் தலைப்புதல்வன்
எமைவிட்டு மறைந்தனனே
யார்செய்த பாவவினையோ!
பொய்மையற்ற பேராசான்
பண்பிற்கு உவமையவன்
துய்யமனச் செம்மலுயர்
தேழமைக்கு உயர்ந்தமகான்
கவலறியாக் கலங்கரையாம்
காப்பாளன் எம்மவர்க்கே
கலங்கியழ வைத்துவிட்டு
காலன்வசம் சென்றதென்னே!
கல்விப்பெருஞ் சாகரத்தின்
கோலோச்சுங் காவலனாய்
நல்லபணி செய்துவென்றாய்
நாயகனாய்க் கொலுவிருந்தாய்
எல்லோர்க்கும் இனியவனே!
இணையற்ற வழிகாட்டி
தொல்லுகத் துன்பத்தை
தாங்காது சென்றனையோ!
நினக்கீடாய் இன்னொருவர்
நினைப்பதற்கும் இல்லைஐயா!!
கனக்கிறதே எம்நெஞ்சம்
கலங்கியழச் செய்தகன்றீர்!



கவிஞர் டொக்டர்
**ஜின்னா ஷெரிபுத்தீன்**

## சீனாவை மீண்டும் அச்சுறுத்தும் புதிய வகை கொரோனா!

உலகின் பெரும்பாலான நாடுகள் கொரோனா பெருந்தொற்றில் இருந்து விடுபட்டு வரும் நிலையில், சீனாவில் வைரஸ் பாதிப்பு மீண்டும் அதிகரித்துள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டு சீனாவில் முதல் முறையாக கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியது. அங்கிருந்து அனைத்து நாடுகளுக்கும் பரவிய கொரோனா வைரஸ், உலக நாடுகளில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா தடுப்பூசி பணிகள் தொடங்கிய பின்னரே, வைரஸ் பரவல் குறையத் தொடங்கியது. இப்போதுதான் உலக நாடுகள் இயல்பு நிலைக்குத் திரும்பி வருகின்றன.

இருந்த போதிலும், இதுவரை எந்தவொரு நாடும் கொரோனா பாதிப்பை முழுமையாக ஒழித்து விடவில்லை. கொரோனா வைரஸ் தொடர்ந்து உருமாறிக் கொண்டே இருப்பதால், அடுத்தடுத்த அலைகளை ஏற்படுத்தி வருகிறது. கடைசியில் தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட ஓமிக் ரோன் உலகெங்கும் மோசமான பாதிப்பை ஏற்படுத்தி இருந்தது. இப்போதுதான் அனை த்து நாடுகளிலும் வைரஸ் பாதிப்பு மெல்லக் குறைந்து வருகிறது.

கடந்த 2 ஆண்டுகளாகவே வைரஸ் பாதிப்பை மிகச் சிறப்பாகக் கையாண்ட சீனாவில் இப்போது வைரஸ் பாதிப்பு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கி உள்ளது. சீனாவில் கடந்த சில நாட்களில் மட்டும் 13,000 இற்கும் அதிகமான நபர்களுக்கு வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது. கொவிட் திட்டத்தைச் சீனா பின்பற்றுவதால், அங்கு பல்வேறு நகரங்களில் முழுமையான ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. அங்கு வைரஸ் பாதிப்பு அதிகரிக்க ஓமிக்ரோன் வகை கொரோனாவே முக்கிய காரணம் ஆகும்.

இந்நிலையில், சீனாவில் புதிய வகை கொரோனா கண்டறியப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது. ஷாங்காய் நகரில் இருந்து சுமார் 70 கிலோமீட்டர் தொலைவில் உள்ள நகரத்தில் சில கொரோனா நோயாளிகளிடம் ஆய்வாளர்கள் சோதனை நடத்தினர். அவர்களுக்கு ஏற்பட்ட கொரோனா பாதிப்பு புதிய வகை ஓமிக்ரோன் வைரசாக இருப்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். இதனை ஓமிக்ரோன் BA.1.1 என்று ஆய்வாளர்கள் அடையாளப்படுத்தி உள்ளனர். இது ஓமிக்ரோன் கொரோனா போலவே தீவிர பாதிப்பை ஏற்படுத்துவதில்லை எனக் கூறப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை மட்டும் சீனாவில் 12,000 இற்கும் மேற்பட்டோருக்கு வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்து வைரஸ் பாதிப்பை கட்டுப்படுத்த சீனா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கொரோனா உறுதி செய்யப்படும் நபர்களைக் கட்டாயம் தனிமைப்படுத்தும் முறையையும் சீன அரசு பின்பற்றி வருகிறது.

சீனாவின் முக்கிய நகரங்களில் ஒன்றான ஷங்காய் நகரில் இப்போது முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையின் புகழ்மிகு தேசிய பத்திரிகை தினகரன்

இவ்வாண்டு தனது 90 ஆவது அகவையைக் கொண்டாடும் தினகரனுக்கும் அதன் ஆசிரியர் குழாமுக்கும் எமது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தினகரன் தனது கடந்த 90 ஆண்டுகாலப் பத்திரிகைப் பணியின் சிறப்புக்களைப் பற்றி ஆராய்ந்து, அப்பின் புலத்தில் தனது எதிர்காலப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு ஆகும்.

இலங்கையில் தமிழ் நாள் ஏடுகளின் வரலாற்றில் தினகரனுக்கு ஒரு பிரதான இடமுண்டு. அவ்வகையில் அதனை ஒரு முன்னோடிப் பத்திரிகையாகக் கொள்ள முடியும்.

யாழ். பாடசாலை மாணவனாக நான் இருந்த காலத்திலிருந்தே தினகரன் பத்திரிகையை நாளாந்தம் வாசிப்பதுண்டு. அக்காலத்தில் வெளிவந்த 'புதன் மலர்' என்ற பகுதி எம் போன்ற பாடசாலை மாணவர்களைப் பெரிதும் கவர்ந்திருந்தது. அதற்காகவே தினகரனை நாடும் மாணவர்கள் அக்காலத்தில் (1950 களின் இறுதியில்) ஏராளமாக இருந்தனர்.

க.கைலாசபதி (பின்னர் பேராசிரியர்), ஆர். சிவகுருநாதன் ஆகியோர் பிரதம ஆசிரியர்களாகப் பணியாற்றிய காலம் அது. தமிழ்மொழி இலக்கியம் என்றில்லாது தமிழ் எழுத்தாளர்களுக்கும் தினகரன் பத்திரிகை பரந்த அளவில் களம் அமைத்துக் கொடுத்த காலம். ஆரம்பத்தில் தமிழர் கதைப் பாணியைப் பின்பற்றிய ஈழத்து இலக்கிய மரபு, புதிய தேசிய இலக்கிய மரபுகளையும் மண்வாசணையையும் கொண்டு பிரகாசிக்க தினகரன் ஒரு காரணமாக இருந்தது என்றால் அதில் கைலாசபதி அவர்களின் பங்களிப்பு பிரதானமானது.

1960களில் முற்போக்கு இலக்கிய இயக்கத்துக்கும் மரபுவாதிகளுக்குமிடையே ஏற்பட்ட இலக்கிய சர்ச்சை பற்றித் தமிழ் வாசகர் உலகம் சிறப்புறப் புரிந்து கொள்ளத் தினகரன் முக்கிய பங்கினை ஆற்றியிருந்தது. முற்போக்கு அணியினர் சார்பாக முகமது சபீமும், மரபு வழியின் சார்பாக கலாநிதி ஆ.சதாசிவமும் தமது சிந்தனைகளைத் தினகரனுக்கூடாக முன்வைத்தனர். இலக்கியங்களில் பேச்சுவழக்கைக் கையாள்வதை 'இழிசனல் வழக்கு' என மரபுவாதிகள் சாட, முற்போக்கு இலக்கிய அணியினர் இலக்கியத்தில் மண்வாசனை, மக்கள் மயப்பட்ட தேசிய இலக்கியம் என தமிழ் உலகுக்குப் புதிய இலக்கிய சிந்தனைகள் அக்காலத்தில் முன்வைக்கத் தினகரன் களம் அமைத்துக் கொடுத்தது.

இவ்வணியினர் இந்த வகையில் ஈழத்துத் தமிழ் இலக்கியம் ஏறத்தாழ கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக வீறுநடை போட அக்காலத்திலேயே தினகரன் வழிவகுத்துத் தொடுத்தது என்பதை நினைவு கூர விரும்புகின்றோம்.

## தமிழ் இலக்கியம் வீறுநடை போடுவதற்கு வழிவகுத்துக் கொடுத்த அபிமானப் பத்திரிகை

இலக்கிய உலகில் இன்னும் மறுக்கப்படாத பல எழுத்துலக ஆளுமைகள் டானியல், டொமினிக் ஜீவா, அ.ந.கந்தசாமி, தெணியான், இளங்கீரன், என்.எஸ்.எம். ராமையா, சி.வி.வேலுப்பிள்ளை, தெளிவத்தை ஜோசப், மு.சிவலிங்கம் எனப் பலரின் எழுத்துக்கு இந்த தமிழ் பத்திரிகை உலகம் களம் அமைத்துக் கொடுத்ததென்றால் அதற்குத் தினகரன் பங்களிப்பும் பிரதானமானது.

**‘90 ஆவது அகவையில் காலடி பதித்துள்ள தினகரனையும், அதன் பயணத்தில் இணைந்துள்ள குழாமையும் உளமார வாழ்த்துகின்றேன்’**



**தினகரனின் 90 ஆம் ஆண்டு பூர்த்தி (15. 03.2022) சிறப்பு மலருக்கு பேராசிரியர் சோ. சந்திரசேகரம் கடந்த மாதம் எழுதிய சிறப்புக் கட்டுரை**

தனிப்பட்ட முறையில் இக்கட்டுரையாசிரியர் 1976 களில் எழுதி முடித்த 'இலங்கை இந்தியர் வரலாறு' என்ற ஆய்வுநூலின் பல ஆரம்ப அத்தியாயங்களைத் தினகரன் வெளியிட்டு என்னைத் தமிழ் கூறும் நல்லுலகுக்கு அப்போது அறிமுகம் செய்திருந்ததை பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

மற்றொரு விடயம், பிரதம ஆசிரியர்களில் இருவர் எனது பல்கலைக்கழ வாழ்வில் தமிழ் விரிவுரையாளர்களாக இருந்தவர்கள். பேராசிரியர்களான கைலாசபதி, தில்லைநாதன் ஆகியோரிடம் கற்றுள்ள பெருமை எனக்குண்டு. சிவகுருநாதன் அவர்களும் ஓர் ஆசிரியர் போன்று எனக்கு எழுத்துத் துறையில் பெரிதும் ஊக்கம் வழங்கியவர். தினகரனின் 90 ஆவது அகவையில் அவர்கள் அனைவரையும் நினைவு கூருகின்றேன்.

சிவகுருநாதன் அவர்கள் பற்றிய ஒரு முக்கிய சிறப்பு, தாம் பணியாற்றிய தினகரனையே அக்காலத்தில் தனது முதுமாணிப் பட்டத்துக்கான ஆய்வுத் தலைப்பாகக் கொண்டமையாகும். ('ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகை வளர்ச்சியில் தினகரன் 1993') இது தினகரனின் மற்றுமொரு சிறப்பு.

தினகரனின் மற்றுமொரு பிரதான அம்சம், நாட்டில் வாழ்கின்ற 'பலதரப்பட்ட' தமிழ் பேசும் மக்களைக் கருத்தில் கொண்டு செயற்படுவதாகும். வடக்கு, கிழக்கு, மலையகம் சார்ந்த சகல தமிழ் மக்களையும் தமிழ் பேசும் முஸ்லிம் என அனைவரது சமூக, பொருளாதார, கலாசார, நிலைமைகளை மேம்படுத்தும் முயற்சியில் தினகரன் செயற்பட்டு வந்ததற்காக யாம் உளமாரப் பாராட்ட முடியும்.

பேராசிரியர் **சோ. சந்திரசேகரன் ...**
(துணைவேந்தர் ஈசொப்ட் வளாகம்)

# கல்வி பொதுத்தராதர பத்திர பரீட்சைகளை நடத்த கலந்துரையாடல்

இவ்வாண்டுக்கான உயர்தர பரீட்சைகளை ஒக்டோபரிலும் மற்றும் சாதாரண பரீட்சைகளை 2023 ஆரம்ப பகுதியிலும் நடத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதோடு , பாடசாலைகளில் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் தவணை விடுமுறைகள் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்திற்கு அமைய வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தேசிய பரீட்சைகள் மற்றும் தவணை விடுமுறைகள் தொடர்பில் கல்வி அமைச்சினால் கடந்த முதலாம் திகதி வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகள்

முதலாம் தவணை

இவ்வாண்டுக்கான முதலாம் தவணையில் முதலாம் கட்ட கல்வி செயற்பாடுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் மே மாதம் 20 ஆம் திகதி வரை (இந்த நாட்கள் உட்பட) முன்னெடுக்கப்படும். அதற்கமைய மே மாதம் 21 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 5 ஆம் திகதி வரை 2021 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைகள் காரணமாக விடுமுறை வழங்கப்படும்.

இதே வேளை முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட தவணை செயற்பாடுகள் ஜூன் மாதம் 6 ஆம் திகதி முதல் ஜூலை 8 ஆம் திகதி வரை (இந்த இரு தினங்கள் உள்ளடங்களாக) இடம்பெறும். அத்தோடு ஜூலை 9 ஆம் திகதி முதல் ஜூலை 17 ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படும்.

இரண்டாம் தவணை

இவ்வாண்டுக்கான இரண்டாம் தவணை கல்வி செயற்பாடுகள் ஜூலை 18 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 16 ஆம் திகதி வரை (இந்த இரு தினங்களும் உட்பட) இடம்பெறும்.

மூன்றாம் தவணை

இவ்வாண்டுக்கான மூன்றாம் தவணையின் முதற்கட்ட கல்வி செயற்பாடுகள் செப்டெம்பர் 19 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 13 ஆம் திகதி வரை (இந்த இரு தினங்கள் உள்ளடங்கலாக) இடம்பெறும். அதற்கமைய ஒக்டோபர் 14 ஆம் திகதி முதல் நவம்பர் 13 ஆம் திகதி வரை இவ்வாண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் காரணமாக விடுமுறை வழங்கப்படும்.

## பஸ்ஸுக்கு தீ வைத்த....

(03 ஆம் பக்கத் தொடர்)

அதேவேளை, மிரிஹான பிரதேசத்தில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் நேற்று அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார். சந்தேகநபர்கள் 31 பேர் நேற்று அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ)

## வடக்கில் கண்ணி வெடி...

(03 ஆம் பக்கத் தொடர்)

வசிக்கும் குடும்பங்களுக்கு தமது சொந்தப் பகுதிகளில் பாதுகாப்பான முறையில் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு வழங்குவதாக அமைந்திருக்கும். குறிப்பாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த இந்த மக்களின் வாழ்வாதாரங்களுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக பங்களிப்புச் செய்வதாகவும் அமைந்திருக்கும்.

இலங்கையில் கண்ணி வெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் ஜப்பானிய அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக இந்தப் பணிகளுக்கு ஆதரவளிக்கப்பட்டுள்ளதுடன், இதுவரையில் 41.4 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமான தொகை உதவியாக வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில், இரு நாடுகளுக்குமிடையே இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகி 70 வருட பூர்த்தியை கொண்டாடும் நிலையில், யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்வதில் பங்களிப்பு வழங்குவது, இலங்கைக்கான ஜப்பானினால் வழங்கப்படும் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியின் முக்கிய பங்கைப் பெறும் அங்கமாக அமைந்துள்ளது. இலங்கை அரசாங்கத்தின் “கண்ணி வெடி பாதிப்பற்ற இலங்கை” எனும் இலக்கை எய்துவதற்கு ஜப்பானிய அரசாங்கம் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என ஜப்பானிய தூதரகம் வெ ளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## TNA, SLMC, TPA, ACMC கட்சிகளும்...

த.சித்தார்த்தன் தெரிவித்தார். தமிழ் முற்போக்குக் கூட்டணி (TPA), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) ஆகிய கட்சிகள் எந்தவொரு சர்வகட்சி, இடைக்கால அல்லது தேசிய அரசாங்கப் பொறிமுறைகளிலும் பங்குபற்றப் போவதில்லையென தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இணைந்து செயற்படுமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பை நிராகரித்துள்ளது.

நேற்று காலை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி (SJB) ஜனாதிபதியின் இந்த அழைப்பை நிராகரித்தது, அதன் தலைவர் சஜித் பிரேமதாச, கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துடன் கட்சி ஒருபோதும் ஒப்பந்தம் செய்யவோ அல்லது நிர்வாகத்தை அமைக்கவோ போவதில்லை என்று கூறினார்.

அத்தோடு மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி) ஜனாதிபதியின் அழைப்பை ஏற்க மறுத்துவிட்டது, அதன் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, பொதுமக்களின் அழைப்புகளுக்கு செவிசாய்த்து தனது இராஜினாமாவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இந்நிலையில். ஜனாதிபதியையும் அவரது அரசாங்கத்தையும் பதவி விலகுமாறு கோரி பொதுமக்கள் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தியதையடுத்து, தேசிய நெருக்கடிக்கு தீர்வு காண அனைத்துக் கட்சி இடைக்கால அரசாங்கத்தை உருவாக்குவதற்கு கைகோர்க்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி நேற்று காலை அழைப்பு விடுத்தார். நாட்டில் நிலவும் மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த சில வாரங்களாக நாடு முழுவதும் பொதுமக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புதிய அமைச்சர்களாக...

மதியம் இந்த சத்தியப்பிரமாண நிகழ்வு நடைபெற்றதுடன் புதிய நிதியமைச்சராக அமைச்சர் அலி சப்ரி ஜனாதிபதியின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அதேவேளை, பாராளுமன்ற சபை முதல்வர் தினேஷ் குணவர்தன மீண்டும் புதிய கல்வியமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதுடன் ஆளும் கட்சியின் பிரதம கொரடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் வெளிவிவகார அமைச்சராகவும் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

அமைச்சரவை கலைக்கப்பட்டுள்ள நிலையில் அமைச்சுப் பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களுக்காக நேற்று நான்கு அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளதுடன் ஏனைய அமைச்சர்களுக்கான சத்தியப்பிரமாணம் பின்னர் இடம்பெறும் என ஜனாதிபதி செயலகம் நேற்று தெரிவித்தது. அதேவேளை, பாராளுமன்றம் இன்று கூடுவதுடன் பாராளுமன்ற நடவடிக்கைகள் வழமைபோன்று இடம்பெறுமென்றும் ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (ஸ)

## அனைத்து கட்சிகளுக்கும் ஜனாதிபதி...

சந்ததியினருக்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை கலைக்கப்பட்டுள்ள நிலையில் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்டு தேசிய நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு ஒன்றிணையுமாறு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் இந்த பகிரங்க அழைப்புக்கு நேற்று சில கட்சிகள் தமது நிலைப்பாட்டை தெரிவித்திருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க அது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், புதிய பதவிகள் எதனையும் தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் எனினும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும்அனைத்து கட்சிகளும் இணைந்து நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைக்கு தீர்வு காணும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை அரசாங்கத்துடன் எந்த ஒரு உடன்படிக்கையையும் மேற்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாரில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் ஜனாதிபதியின் அழைப்பை நிராகரிப்பதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. அந்தக் கட்சியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க நேற்றையதினம் கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

## ரணில் எந்தப் பதவியையும்...

இதுவரை காலமும் பொறுப்பேற்காத எந்தப் பதவியிலும் இனியும் பொறுப்பேற்கத் தயாரில்லை என அவர் தெரிவித்துள்ளதாகவும் அந்தக் கட்சி நேற்று தகவல் வெளியிட்டுள்ளது.

தேசிய நெருக்கடிக்கு தீர்வுகாணும் வகையில் அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைத்துக் கட்சிகளுக்கும் பகிரங்க அழைப்பு விடுத்துள்ள நிலையில் அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே ரணில் விக்கிரமசிங்கவின் முடிவை ஐக்கிய தேசியக் கட்சி நேற்று வெளியிட்டுள்ளது.

அதேவேளை, சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கிணங்க அனைத்து கட்சித் தலைவர்களையும் ஒன்றிணைத்து குழுவொன்று அமைத்து தேசிய நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளதாகவும் அந்த நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமும் கிடையாதென்றும் அந்தக் கட்சி நேற்றுத் தெரிவித்தது.

அத்துடன் கடந்த இரு தினங்களுக்கு முன், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூற்று ஒன்றை வெளியிட்டு, தாம் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தி பாதிக்கப்பட்டுள்ள நாட்டு மக்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை பாராளுமன்றத்தின் மூலம் முன்வைக்குவைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்ளவுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை, கட்சி பேதங்களின்றி தேசிய ஒருமைப்பாட்டுடன் செயற்பட வேண்டுமெனவும் பாராளுமன்றம் கூட்டப்பட்ட உடனேயே அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ)

## மூன்று மாதங்களில் இலங்கைக்கு...

இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் 500 மில்லியன் டொலர் கடன் திட்டத்தின் கீழ் நாட்டை வந்தடைந்த 40 000 மெட்ரிக் தொன் டீசலை இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லேவிடமிருந்து , வலு சக்தி அமைச்சர் காமினி லொக்குகே நேற்று முன்தினம் பெற்றுக் கொண்டிருந்தார்.

இது குறித்து இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :

இந்திய கடன் திட்டத்தின் கீழ் நான்காவது கட்டமாக இந்த டீசல் தொகை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கடந்த மார்ச் மாதம் 16, 20 மற்றும் 23 ஆம் திகதிகளில் எரிபொருள் தொகை நாட்டை வந்தடைந்தது. அதற்கமைய கடந்த சனிக்கிழமை நாட்டை வந்தடைந்த 40 000 மெட்ரிக் தொன் எரிபொருள் உள்ளடங்கலாக 50 நாட்களில் 200 000 மெட்ரிக் தொன் எரிபொருளை இந்தியா இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இந்நிகழ்வில் உரையாற்றிய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, தற்போதைய சூழ்நிலையில் அண்டை நாட்டுக்கு முதலிடம் என்ற கொள்கைக்கு இணங்க இலங்கை மக்களுக்கு இந்தியாவின் அர்ப்பணிப்பின் உறுதியான வெளிப்பாடாக எரிபொருள் விநியோகத்தை சுட்டிக்காட்டினார். இந்தியாவின் இந்த உதவிகளுக்கு வலு சக்தி அமைச்சர் காமினி லொக்குகே நன்றி தெரிவித்தார்.

முன்னதாக, மார்ச் 23 ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைக்கான சமீபத்திய இந்திய பொருளாதார மேம்பாட்டு உதவி மற்றும் கடன் வசதிகளுக்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்ததுடன், எதிர்காலத்திலும் இலங்கையின் வளர்ச்சியில் இந்திய அரசாங்கம் சிறப்பு கவனம் செலுத்தும் என்றுதான் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

பெட்ரோலியப் பொருட்களை வாங்குவதற்கான 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் ஒப்பந்தத்தில் கடந்த பெப்ரவரி 2 ஆம் திகதி இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியும் இலங்கை அரசாங்கமும் கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பில் திறைசேரி செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல கையெழுத்திட்டதோடு , எக்ஸிம் வங்கி சார்பில் அதன் பிரதம பொது முகாமையாளர் கௌரவ் பண்டாரி இந்தியாவின் சார்பில் கையெழுத்திட்டார். மேலும், இலங்கை அரசாங்கத்தின் தனியான மற்றும் அவசர கோரிக்கைக்கு இணங்க, உணவு மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக 1 பில்லியன் டொலர் கடன் வசதியை நீடிப்பது இறுதி செய்யப்பட்டுள்ளதுடன், இந்த வசதியின் கீழ் இந்தியாவிலிருந்து அரிசியின் முதல் ஏற்றுமதி விரைவில் இலங்கையை சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. துறைமுகங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உற்பத்தி போன்ற முக்கிய துறைகளில் இலங்கையில் மேம்படுத்தப்பட்ட இந்திய முதலீட்டின் மூலம் நடுத்தர முதல் நீண்ட கால திறன் உருவாக்கத்திற்கான முயற்சிகளை இந்திய அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## அரசியல் கைதிகள் குறித்து...

கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்றைய தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார். அதில் மேலும்,

இரத்தினபுரி மேல் நீதிமன்றில் 2020.7.31 திகதி தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரான பிரேமலால் ஜயசேகர உட்பட மூவர் 2022.3.31 அன்று மேன்முறையீட்டு நீதிமன்றில் குற்றவாளிகள் இல்லையெனக் குற்றங்களிலிருந்து விடுவித்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு நீதிமன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்டவர் இன்னொரு நீதிமன்றில் குற்றமற்றவர் என முடிவு செய்வது விசித்திரமாய் உள்ளது. இது சட்டங்களில் உள்ள ஓட்டையா? சட்டத்தரணிகளின் வாதத் திறமையாலா? என்பதே பொதுமக்களின் கேள்வி. இவ்வாறு விடுதலை பெற முடியாதவர்களை ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை பெறுவது நாட்டில் நிலவும் அரசியல் கலாசாரமாக உள்ளது. அதிகாரத்தோடு தொடர்புடையவர்களுக்கும் பணபலம் படைத்தவர்களுக்கும் நீதி தேவதை சார்போ எனவும் சாதாரண மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இவ்வாறான நிலையில் அதிகாரத்தோடு தொடர்பும் பண பலமும் இல்லாத சாதாரண அடித்தட்டு மக்கள் சிறையில் வாடுபவர்களின் உறவினர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

அதிலும் பயங்கரவாத தடை சட்டத்தின் இறுக்கம் மற்றும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நீதித் துறையினதும் அதிகாரிகளினதும் அசமந்த போக்கு என்பன காரணமாகவும் சட்ட நுணுக்க அறிவு கொண்ட போதிய சட்டத்தரணிகள் இன்மையாலும் அரசியல் கைதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதுமட்டுமல்ல பிணை இன்றி நீண்ட காலம் சிறையில் வாடுகின்றனர். அத்தோடு பிணை வழங்குவதற்குச் சிபாரிசு செய்யக்கூடிய அதிகாரம் கொண்டவராக சட்டமா அதிபர் விளங்கிய போதும் அரசியல் கைதிகளின் விடயத்தில் அதனை செய்யாமல் இருப்பது அரசியல் காரணம் என்று சிந்திக்கத் தோன்றுகின்றது.

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசிமின் பயிற்சி முகாமில் பங்கேற்றதாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்த 16 பேருக்குச் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் கடந்த 25ஆம் திகதி பிணை வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் அரசியல் கைதிகள் விடயத்தில் சட்டமா அதிபர் அக்கறையின்றி இருப்பது ஏன்? ஒரே நாடு ஒரே சட்டம். ஆனால் தமிழர்கள் அன்னியமாகப் பார்க்கப்படுகிறனர் என்பதற்கு இது இன்னுமொரு உதாரணமாகும். அண்மையில் ஜனாதிபதியோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த சுமந்திரன், 10 வருடங்களுக்கு மேலாகச் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை வெளியில் விடுவது தொடர்பாக நீதி அமைச்சரோடு கலந்தாலோசித்து விடப்படும் என தெரிவித்தார்.

அரசியல் கைதிகள் அத்தனை பேரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும். இது தவிர அவர்களை வகைப்படுத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துணை போவது என்பது அரசியல் கைதிகளுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் செய்கின்ற துரோகமாகவும் அமையும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# தவக்கால சிந்தனை



## இறைவன் மீதான நம்பிக்கை

இயேசு தமது சிலுவை மரணம் தொடர்பில் தெரிவிப்பதை இன்றைய நற்செய்தி நமக்கு விளக்குகிறது.(யோவான் 8:21 30)

இயேசு பரிசேயர்களை நோக்கி நான் போன பின் நீங்கள் என்னை தேடுவீர்கள். நான் போகும் இடத்திற்கு உங்களால் வர இயலாது நீங்கள் பாவிகளாகவே சாவீர்கள்"என்றார்.

யூதர்களோ நான் போகும் இடத்திற்கு உங்களால் வர முடியாது என்று சொல்கிறாரே ஒருவேளை அவர் தற்கொலை செய்து கொள்ளப் போகிறாரோ என்று பேசிக்கொண்டார்கள்.

இயேசு அவர்களிடம் நீங்கள் கீழிருந்து வந்தவர்கள். நான் மேலிருந்து வந்தவன். நீங்கள் இவ்வுலகைச் சேர்ந்தவர்கள் ஆனால் நான் இவ்வுலகைச் சார்ந்தவனல்ல. ஆகவே தான் நீங்கள் பாவிகளாய் சாவீர்கள் என்றேன். 'இருக்கிறவர் நானே' என்பதை நீங்கள் நம்பாவிடில் நீங்கள் பாவிகளாகவே சாவீர்கள் என்றார். என்னை அனுப்பியவர் என்னோடு இருக்கிறார். நானும் அவருக்கு உகந்தவற்றையே எப்போதும் செய்கிறேன் என்றும் இயேசு கூறினார்.

நாமும் பல்வேறு மனிதர்களில் பொருட்களில் நமது நம்பிக்கையை வைக்கின்றோம். ஆண்டவரில் முழுமையான நம்பிக்கையை வைப்பதில் தவறி விடுகின்றோம்.

நமது பாவங்கள், சுயநலம், இன்னோரன்ன தீய சிந்தனைகள், செயல்பாடுகள் ஆண்டவரிடமிருந்து எம்மை தூரமா க்குகின்றன என்பதை நாம் உணர்வோம்.

இயேசு இன்றைய நற்செய்தியில் தாம் இறை தந்தையின் மகன் என்றும் அவரால் அனுப்பப்பட்டவர் என்றும் அவர் சொல்வதையே தாம் செய்வதாகவும் தெரிவித்து அவர் மீது நம்பிக்கை கொள்ளுமாறு வலியுறுத்துகின்றார்.

அவர் நம்பிக்கை வைப்பவனே வாழ்வான். இந்தத் தவக்காலத்தில் அவரிடம் சரணடைந்து அவருடன் இணைந்தாக எம் வாழ்வை நடத்திச் செல்வதற்கு அருள் வேண்டி மன்றாடுவோம்.

எல்.செல்வா...

## சகல பிரச்சினை...

(03 ஆம் பக்கத் தொடர்)

விவசாயத்துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து தொடர்பில் ஆராய விசேட திட்டங்களை செயற்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளோம்.நாட்டு மக்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு சேதன பசளை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.ஒருதரப்பினரது தவறான செயற்பாடுகளினால் சேதன பசளை திட்டம் குளறுபடியாக்கபட்டுள்ளது. நாட்டு மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையினை கொண்டு ஒரு தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக்கொள்ள முயற்சிக்கிறார்கள். அரசியல்வாதிகளின் தவறான வழி நடத்தல்களினால் போராட்டம் தீவிரமடைகிறது என்றார்.

## IOCயிடமிருந்து 10 இலட்சம் லீட்டர்...

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு தேவையான டீசல் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐ.ஓ.சி நிறுவனத்தின் கப்பல்கள் மூலம் நாட்டுக்கு எரிபொருள் கொண்டுவரப்படும் நிலையில் அதற்கு மேலதிகமாகவே மேற்படி 10 இலட்சம் லீற்றர் டீசல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். அதேவேளை, இந்திய கடன் திட்டத்தின் கீழ் எரிபொருள் கப்பலொன்று நேற்றும் நாட்டை வந்தடைந்ததாகவும் அந்தக் கப்பலில் 20,000 மெற்றிக் தொன் எரிபொருள் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## இடைக்கால அரசினை அமைக்க...

ட்வீட் செய்துள்ளார். இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு உதவுவதற்காக முழு அமைச்சரவையும் நேற்று முன்தினமிரவு பதவி விலகியமையை அடுத்து அவரது கருத்துக்கள் வெளியாகியுள்ளன. ஏற்கனவே இடைக்கால அரசாங்க யோசனைக்கு ஜேவிபி தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

## புதிய போத்தலில் உள்ள...

புதிய போத்தலில் உள்ள பழைய மது என்றும் அத்தியாவசிய சேவைகளை மீளப் பெறுவதற்கும் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கும் அனைத்துக் கட்சிகளின் இடைக்கால அரசாங்கமே தமது கோரிக்கையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## டீசல் வழங்கலில் தனியார்...

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பஸ்களை இயக்க வேண்டுமாயின் முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தற்போது ஏராளமான பஸ்கள் டீசல் பெறுவதற்காக வரிசையில் நிற்பதாக சங்கத்தின் பிரதம செயலாளரான அஞ்சனா பிரியஞ்சித் தெரிவித்துள்ளார். நேற்று 15 வீதமான பஸ்கள் மாத்திரமே இயக்கப்பட்டன. பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு உரிய அதிகாரிகளும் அரசாங்கமும் பொறுகூற வேண்டும் என தெரிவித்த அவர், தனியார் பஸ்களுக்கு டீசல் வழங்கும் நடைமுறை இதுவரை வகுக்கப்படாமை குறித்து கவலை வெளியிட்டார்.

## மூத்த கல்வியியல் பேராசிரியர்...

1944 டிசம்பர் மாதம் பிறந்த பேராசிரியர் சந்திரசேகரம், இலங்கையின் தமிழ் கல்வி வரலாற்றில் பாரிய பங்களிப்புக்களை செய்தவராவார்.

பதுளையை பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் சோ. சந்திரசேகரம் கல்வியியல் துறையில் பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் ஹிரோசிமா பல்கலைக்கழக முதுமானி பட்டதாரியாவார்.

கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் துறை முன்னாள் பீடாதிபதியாகவும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் முன்னாள் அங்கத்தவராகவும் மற்றும் கொழும்பு தமிழ் சங்கத்தின் முன்னாள் தலைவராகவும் அவர் பணியாற்றினார். சமூக பிரஜைகளுடன் செயற்பட்டு தமது எழுத்துக்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகளின் மூலம் சமூக மேம்பாட்டுக்காக பாடுபட்ட அவர், தமிழ், ஆங்கில, சிங்கள மொழிகளில் புலமை கொண்டவர் என்பதுடன் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

மலையகத்தில் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்ற கொள்கையை முதன் முதலில் முன்மொழிந்த சோ.சந்திரசேகரம், அந்த கொள்கையில் உறுதியாகவும் இருந்தார்.

## மத்திய வங்கியின் ஆளுநராக...

தீர்மானித்துள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதற்கமைய தற்போது அவுஸ்திரேலியாவில் இருக்கும் கலாநிதி நந்தலால் வீரசிங்கவிடம் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இம்மாதம் 7ஆம் திகதி இலங்கை வரவுள்ள அவர், மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை பொறுப்பேற்பது தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக உள்ளகத் தகவல்களில் இருந்து அறியமுடிகிறது.

## பாராளுமன்றத்தில் சுயாதீனமாக...

உள்ளிட்ட 10 பங்காளிக் கட்சிகளின் 16 பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்றைய தினம் பாராளுமன்றத்தில் சுயாதீன குழுவாக செயல்படுவார்களென அந்த கட்சிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் ஆளும் கட்சியிலிருந்து விலகி, தனியாக அமரவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மம்பில ஆகியோர் அமைச்சுப் பதவிகளிலிருந்து விலக்கப்பட்டாலும் அவர்கள் தொடர்ந்தும் ஆளும் கட்சியிலேயே செயற்பட்டு வருகின்றனர். எனினும் அவர்களும் அவர்களுடன் இணைந்த 16 பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்றைய தினம் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ)

## ஜனாதிபதியின் அழைப்பு: ...

இடைக்கால, குறுகிய கால அல்லது சர்வகட்சி அரசாங்கக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு ஜனாதிபதி அல்லது பிரதமருடன் ஜே.வி.பி இணைந்து கொள்ளமாட்டாது என தெரிவித்த அக்கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, முதலில் ஜனாதிபதி தனது பதவியிலிருந்து விலக வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார். ஜனாதிபதி மக்களின் கோரிக்கைகளை புரிந்து கொள்ள தவறிவிட்டார் எனவும், தற்போதைய நெருக்கடியானது அமைச்சுப் பதவிகள் தொடர்பான பிரச்சினையல்ல எனவும் அவர் தெரிவித்தார். இவ்வாறான பிரேரணையை முன்வைப்பதற்கு ஜனாதிபதிக்கு நியாயமான காரணங்கள் எதுவும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

# பேருவளையில் நவீன வசதிகளுடனான உதைபந்தாட்ட மைதானம் அமைப்பதே எனது நீண்டகால கனவாகும்



## பேருவளை உதைபந்தாட்ட சங்கத் தலைவர் எம்.எஸ்.எம். ரிஸ்வான்

உதைபந்தாட்ட துறையில் புகழ்பெற்ற பிரதேசமாக பேருவளை விளங்குகிறது. இப்பகுதி வீரர்கள் தேசிய, சர்வதேச மட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில கலந்துகொண்டு பேருவளைக்கு பெருமை சேர்த்து வருகிறார்கள். இருந்தும் இங்கு முழு நிறைவான விளையாட்டு மைதானம் ஒன்றில்லாத பெரும்குறை நிலவுகிறது. தற்போது ஆளும் தரப்பிலுள்ள எமது அரசியல் தலைவர்களின் முயற்சியில் இந்த தேவையும் விரைவில் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கிறேன் என்று பேருவளை உதைபந்தாட்ட சங்கத் தலைவர் எம்.எஸ்.எம். ரிஸ்வான் தெரிவித்தார்.

உதைபந்தாட்ட சங்கத் தலைவர் ரிஸ்வானிடம் இது தொடர்பில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

தொடர்ந்தும் அவருடனான கலந்துரையாடலில் இருந்து.

**வினா:** உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்

**பதில் :** பேருவளை மககொடையைச் சேர்ந்த முகம்மது சாலி ஜனா பீபி தம்பதியின் புதல்வனாக 1977 மே மாதம் 23 ஆம் திகதி மககொடையில் பிறந்தேன்.சம்சுத்தீன் வித்தியாலயத்தில் கற்று, மாணிக்கக்கல் வியாபாரத்தில் இறங்கினேன். இன்றுவரையும் உதைபந்தாட்டத் துறை பணியோடு மாணிக்கக்கல் வர்த்தகத்திலும் அதிக ஈடுபாடு காட்டி வருகிறேன்.

**வினா:** உதைபந்தாட்டத்துறையில் எவ்வாறு கால்பதித்தீர்கள்?

**பதில்:** பள்ளிப் பருவத்திலிருந்தே உதைபந்தாட்டத்தில் ஆர்வம்காட்டி வந்த நான் பேருவளை மககொடையில் இயங்கி வந்த சுப்பர் சன் விளையாட்டுக் கழகத்தில் ஒரு பயிலும் விளையாட்டு வீரனாக 1994 ஆம் ஆண்டு இணைந்தேன். அங்கு படிப்படியாக உயர்வுகண்டு 1998 ஆம் ஆண்டாகும் போது, கழகத்தின் முகாமையாளரானேன். பின்னர், தற்போது வரை அதன் தவிசாளராக இருந்து பங்களிப்புச் செய்து கொண்டிருக்கிறேன். அன்று முதல் இன்று வரையும் சுப்பர் சன் கழகத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் என்னால் இயன்ற வரை உழைத்துக் கொண்டிருக்கிறேன்.

**வினா:** சுப்பர் சன் கழகத்தின் வளர்ச்சி தொடர்பில்,...

**பதில்:** இக்கழகம் எமது பிரதேசத்தில் மட்டுமல்ல, மாகாணத்திலும் அகில இலங்கை ரீதியிலும் பெரும் புகழ் பெற்ற கழகங்களில் ஒன்றாக திகழ்கிறது. இது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**வினா:** பேருவளை உதைபந்தாட்டச் சங்கத்திலும் தலைவராக இருக்குறீர்கள் அது தொடர்பில் சில தகவல்கள்,...

**பதில் :** ஆம், அச்சங்கத்தில் அங்கத்துவம் பெற்றிருந்த நிலையில் எனது ஆற்றலைக் கண்டு உபதலைவர் பொறுப்பு தரப்பட்டது. நாளடைவில் தலைமைப் பதவிக்கே அமர்த்தப்பட்டேன். 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் அதில் அங்கம் வகிக்கும் 11 கழகங்கள் என்னை ஆதரித்து வாக்களித்து தலைவராகத் தேர்ந்தெடுத்தனர்.

**வினா :** தலைமைப் பதவி மூலம் சாதித்த பணிகள்?

**பதில் :** பேருவளைத் தொகுதியில் தலைசிறந்த உதைபந்தாட்டக் கழகங்களையும் முன்னணி வீரர்களையும் உருவாக்க வேண்டும் என்ற தூரநோக்குடன் தான் நான் தலைமைப் பொறுப்பை ஏற்றேன். அதேபோன்று இலங்கையிலேயே முதலாவது லீக்காக பேருவளை லீக்கை மாற்றியமைக்க வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டு பூரிப்புடன் செயற்படலானேன். இச்சந்தர்ப்பத்திலேயே கொரோனா எனது இலட்சியப் பயணத்தில் குறுக்கிட்டது. அதனால் சுமார் 1 1/2 வருடங்கள் போட்டியோ, பயிற்சிகளோ நடாத்த முடியாது ஸ்தம்ப நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

விளையாட்டு மைதான செலவு, நடுவர் கொடுப்பனவு உள்ளிட்ட சகல செலவுகளையும் நானே பொறுப்பேற்பேன்.தற்போது எனது நிதியில் சுமார் 4 1/2 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து, 'நொகவுட் சுற்றுப்போட்டி பேருவளை புட்போல் லீக் பிரசிடன் டெலண்ட்' சுற்றுப் போட்டி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பேருவளை வரலாற்றில் உதைபந்தாட்டப் போட்டியொன்று இதுவரை நடைபெறாத விதத்தில் மேற்படி போட்டிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இதில் இடம்பெறும் ஒவ்வொரு போட்டியின் போதும் சிறந்த வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்கள் வழங்கி ஊக்குவிப்புச் செய்தும் வருகிறேன்.

**வினா :** உங்கள் பணிகளுக்கு சங்கத்தின் இதர உத்தியோகத்தர்களது ஒத்துழைப்புகளும் கிடைக்கின்றனவா?

**பதில் :** ஆம், இரு கைகள் தட்டினால்தான் ஓசை வரும். எனது சங்க செயலாளர், உபதலைவர், குழு அங்கத்தவர்கள் மற்றும் இதர அங்கத்தவர்களும் பக்க பலமாக நின்று செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இது எனக்கு உந்து சக்தியைக் கொடுக்கிறது, எனக்கு மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருகிறது. எனது இத்தகைய பணிகளில் அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்திலும் ஓர் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளேன். இது பேருவளை மக்களுக்குக் கிடைத்த ஒரு கௌரவம் என்றே கூறலாம். மேற்படி சம்மேளனத்தின் தலைவருடனும் நெருக்கமான உறவு வைத்துள்ளேன். அதனால் அவர்களது ஒத்துழைப்பு மற்றும் சலுகைகளைப் பெற்று எமது இளம் வீரர்களுக்கான பல்வேறு வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகிறேன்.

**வினா :** உதைந்தாட்டம் தொடர்பான பல உன்னத பதவிகள் உங்களை வந்தடைந்துள்ளன. அவற்றின் மூலம் தொடரும் பணிகள் என்ன?

**பதில் :** எமது பிரதேச உதைபந்தாட்ட வீரர்கள் தேசிய, சர்வதேச ரீதியல் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றி ஊருக்கு பெருமை தேடித் தருகிறார்கள். எதிர்காலத்திலும் அத்தகைய வாய்ப்பு கிடைக்க எனது பதவிகள் வழிகோலுகின்றன. இதன் மூலம் சிறந்த வீரர்கள் புடம் போடப்படுகிறார்கள்.

நான் அங்கத்துவம் வகிக்கும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் சுபர் லீக், சம்பியன் லீக், டிவிஷன்1, டிவிஷன்2 ஆகிய விளையாட்டுப் போட்டிகளில் எமது பகுதி உதைபந்தாட்ட சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களும் பங்குபற்றி வருகின்றன. இது எனது எண்ணக் கருவுக்குக் கிடைத்த வெற்றியாகும். எமது லீக்கில் 22 உதைபந்தாட்ட கழகங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வினா :** எவ்வாறு இருந்தும் சகல வசதிகளுடன் கூடிய பூரண விளையாட்டு மைதானம் ஒன்றில்லையே என்று கூறப்படுகிறதே!

**பதில் :** ஆம், எமது பிரதேச விளையாட்டு போட்டிகள் யாவும் அன்று முதல் இன்று வரை தர்ஹாநகர் ஸாஹிரா கல்லூரி மைதானத்திலேதான் நடாத்தப்படுகின்றன. அங்குதான் பயிற்சிகளிலும் ஈடுபடும் துரதிஷ்டம் காணப்படுகிறது. ஸாஹிரா மைதானம் எமது விளையாட்டு வீரர்களுக்குள்ள ஒருபெரும் சொத்தாக உள்ளது. அதுவும் இல்லை என்றால் எமது வீரர்கள் தூர இடங்களுக்கே செல்லவேண்டியுள்ளது.

தற்போது அதனை எமது தேவைகளுக்குத் தந்துதவும் ஸாஹிரா அதிபர், கல்லூரி அபிவிருத்திச் சங்கம், கல்வித் திணைக்களம் மற்றும் ஊர் மக்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இம்மைதானமும் புனரமைக்கப்பட்டு நவீனமயப்படுத்தப்பட வேண்டும் என்பதும் எனது அவாவாகும்.

**வினா:** பூரணத்துவம் பெற்ற மைதானம் ஒன்றைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளீர்களா?

**பதில் :** ஆம், அந்த முயற்சி வெற்றிபெறும் வரை நான் ஓயமாட்டேன். எமது தொகுதியில் இவ்வாறான சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சிறந்த பாராளுமன்றப் பிரதிநிதிகள் தெரிவாக வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அது ஈடேறியுள்ளது. ஆளும் கட்சி சார்பில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த டீ சில்வா,மர்ஜான் பளீல் எம்.பி ஆகியோர் இன்றுள்ளனர்.

எமது விளையாட்டு மைதானத்தின் தேவை குறித்து, பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலுடன் பலமுறை கலந்துரையாடியுள்ளேன். அதன் விளைவாக பேருவளையில் நவீன வசதிகளுடனான விளையாட்டு மைதானம் ஒன்று அமைய நடவடிக்கையில் இறங்கியுள்ளார். அது விரைவில் கைகூடும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இந்த மைதானம் கிடைத்துவிட்டால் எமது பகுதி விளையாட்டு வீரர்கள் மேலதிக பயிற்சிகளை மேற்கொள்ளலாம். அதன் மூலம் ஏராளமான வீரர்களை உருவாக்கும் பிரதேசமாக பேருவளை விளங்கும். பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளையும் நடத்தும் வாய்ப்பும் கிடைக்கும்.

**வினா :** இறுதியான உங்கள் உள்ளக் கிடைக்கையின் வார்த்தைகள்,..

**பதில் :** நவீன வசதிகளுடனான விளையாட்டு மைதானம் விரைவாக எம்மை வந்தடையும் நாளே நான் நிம்மதியாக மூச்சுவிடும் நாளாகும. அத்துடன் அகில இலங்கை உதைபந்தாட்ட சங்கத்திற்கு நாம் எதிர்பார்த்த யஸ்வர் உமர் என்ற சிறந்த தலைவர் ஒருவர் கிடைத்திருக்கிறார். பேருவளையில் சிறந்ததொரு விளையாட்டு மைதானமே அவரதும் இலக்காகவுள்ளது. இது விடயமாக நான் அவருடனும் உரையாடியுள்ளேன். அவரும் உறுதியளித்தார். அதற்காக ஒத்துழைப்பு நல்கி வருகிறார்.

அதனால் எமது தேவை நிறைவேறும் என்று எதிபார்க்கலாம்.

அவரும் உதைபந்தாட்டத் துறையில் சிறந்த அனுபவமுள்ளவர். அதனால் விளையாட்டுத் துறையை சிறப்பாக முன்னேற்றுவதில் பின் நிற்கமாட்டார்.

அவரதும் எங்களதும் விளையாட்டுத் துறை இலக்கு வெற்றிபெற பிரார்த்திக்கிறேன்.

**பீ.எம். முக்தாத் பேரவளை**





ஸ்ரீலங்கா சமாதான கற்கை நிறுவனம் ஒழுங்கு செய்திருந்த சர்வதேச கல்விச் சுற்றுலா ஆய்வு மகாநாடு கொழும்பு பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை பேராசிரியர் கலாநிதி எஸ்.எல்.றியாஸ் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் போது ஊடகத்துறைக்கு கடந்த 25 வருடங்களாக பங்களிப்பு செய்துவரும் இலங்கை சமாதான ஊடக அமைப்பின் தலைவரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான எம்.எம்.ஜெஸ்மின் மற்றும் மூன்று மொழிகளிலும் தேசியத்திலும் சர்வதேசத்திலும் தனது ஊடக பங்களிப்பினை வழங்கிவரும் சிரேஸ்ட ஊடகவியலாளர் அஸ்ஹர் இப்றாஹிம் ஆகியோர் சிறந்த ஊடகவியலாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.


வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

DLB LOTTERY Show

அபிவிருத்தி லொத்தர் சபையின் வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல் !

2022.04.03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அரசினால் அறிவிக்கப்பட்ட ஊரடங்கு சட்டம் காரணமாகவும் விற்பனை நிலமை காரணமாகவும் அபிவிருத்தி லொத்தர் சபையினால் சீட்டிழுக்கப்படவிருந்த சீட்டிழுப்புகள் பின்வருமாறு மாற்றம் செய்ய அபிவிருத்தி லொத்தர் சபை தீர்மானித்துள்ளது.

| டிக்கட்டுகளில் அச்சிடப்பட்டுள்ள திகதி (சீட்டிழுக்கப்படவிருந்த திகதி) | சீட்டிழுப்பு நடைபெறவுள்ள திகதி | சீட்டிழுக்கப்படும் லொத்தர் டிக்கட்டுகள் |
|---|---|---|
| 2022 ஏப்ரல் 03, ஞாயிறு | 2022 ஏப்ரல் 04, திங்கள் | அத கோடிபதி, ராசி அதிர்ஷ்டம், சுப்பர் போல், சனிதா, கப்ருக, சசிரி |
| 2022 ஏப்ரல் 04, திங்கள் | 2022 ஏப்ரல் 05, செவ்வாய் | அத கோடிபதி, ராசி அதிர்ஷ்டம், சுப்பர் போல், சனிதா, கப்ருக, ஜயோதா |
| 2022 ஏப்ரல் 05, செவ்வாய் | 2022 ஏப்ரல் 06, புதன் | அத கோடிபதி, ராசி அதிர்ஷ்டம், சுப்பர் போல், சனிதா, கப்ருக, சசிரி |
| 2022 ஏப்ரல் 06, புதன் | | அத கோடிபதி, ராசி அதிர்ஷ்டம், சுப்பர் போல், சனிதா, கப்ருக, ஜயோதா |

தலைவர்
அபிவிருத்தி லொத்தர் சபை,
இல.356, கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஏப்ரல் 5
செவ்வாய்க்கிழமை

# மன்னார் மாவட்டம் : தடையின்றி எரிபொருளை வழங்க நடவடிக்கை

மன்னார் மாவட்டத்தில் தடையின்றி அரச மற்றும் தனியார் துறையினருக்கு எரிபொருட்களை சீரான முறையில் விநியோகிப்பது தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை (4) மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அரச, தனியார் போக்குவரத்து சங்கம், மீனவ அமைப்புகள், வெதுப்பக உரிமையாளர்கள், எரிபொருள் நிரப்பும் நிலைய முகாமையாளர்கள், மன்னார் மின்சார சபை அத்தியட்சகர், மன்னார் வைத்தியசாலை தரப்பு பிரதேச செயலாளர்கள் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள் கலந்து கொண்டனர்.



மீனவர்களுக்கு கடல் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள மீன்பிடி படகு மற்றும் டோலர் படகுகளுக்கு தேவையாக மண்ணெண்ணெய் மற்றும் டீசல் ஆகிய எரிபொருட்களை உரிய முறையில் பகிர்ந்தளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கு அமைவாக மாவட்டத்திலுள்ள மீனவ அமைப்புகள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் மாவட்டத்திலுள்ள வெதுப்பகங்களுக்கும் உரிய முறையில் எரிபொருளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

இதேவேளை மாவட்டத்தில் திடீரென மின் தடங்கள் ஏற்படுகின்ற போது உடனடியாக அவசர தேவைகளுக்கு எரிபொருளை வழங்கவும், குறிப்பாக மாவட்ட வைத்தியசாலைக்கு தேவையான எரி பொருளை சிரமங்கள் இன்றி பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. பயணிகள் சேவையில் ஈடுபட்டு வரும் அரச, தனியார் பேருந்துகளுக்கு உரிய வகையில் எரி பொருளை பெற்றுக் கொடுக்கவும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என அவர் கோரிக்கை விடுத்தார்.

## யாழில் தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களும் போராட்டம்



யாழ். விசேட நிருபர்

யாழ் மாவட்ட உயர் தொழில் நுட்ப கல்லூரி மாணவர்களால் அரசாங்கத்திற்கு எதிராக யாழ் நகரில் போராட்டமொன்று நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்டது.

கல்வி சுகாதாரம் மற்றும் பொருளாதாரத்தின் வீழ்ச்சியில் மக்கள் வாழ்க்கையை நசுக்கிடும் அரசாங்கத்தினுடைய செயற்பாடுகளுக்கு எதிராக இதன்போது கோஷங்கள் எழுப்பப்பட்டது.

போராட்டக்காரர்கள் நேற்று மதியம் 12 மணியளவில் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திலிருந்து ஆரம்பித்து யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு சென்றனர்.

போராட்டம் காரணமாக யாழ் மாநகரில் சில மணி நேரம் போக்குவரத்து ஸ்தம்பித்தது.



நோர்த் சீ எனப்படும் வடகடல் நிறுவனத்தின் உற்பத்திகளை விஸ்தரித்து, அதன் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெயசங்கரிடம் ஒத்துழைப்புக்களை கோரியுள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நேற்று வடகடல் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரிகளை சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது, இந்தியாவின் ஒத்துழைப்புக்களை நிறுவனத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாக மாற்றுவதற்கான வழிவகைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

## யாழ்.பல்கலை கல்வி நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம்

யாழ்.விசேட நிருபர்

யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப் பட்டுள்ளதுடன், விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களை வீடுகளுக்குச் செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற பீடாதிபதிகள் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. இதன்படி, நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்திற் கொண்டு, மாணவர் நலன்கருதி உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்துப் பீடங்களினதும் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படுவதுடன், விடுதிகளில் தங்கி நிற்கும் மாணவர்களை விடுதிகளிலிருந்து வெளியேறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் பரீட்சை மற்றும் அத்தியாவசிய ஆய்வு நடவடிக்கைகளுக்காக மருத்துவ பீடத்தின் இறுதி வருட மாணவர்களுக்கு மாத்திரம் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விடுதிகளிலுள்ள மாணவர்களை வீடுகளுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும், மாணவர்களின் போக்குவரத்து ஏற்பாடுகளுக்கமைய விடுதிகளை விட்டு வெளியேறுவதற்குப் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை நேற்றைய தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் அரசுக்கு எதிரான போராட்டத்தினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸாரால் முறியடிக்கப்பட்ட சட்டவிரோத மணல் அகழ்வு

சாவகச்சேரி விசேட நிருபர்

கொடிகாமப் பொலிஸாரினால் சட்டவிரோத மணல் கடத்தல் சம்பவமொன்று நேற்றுமுன்தினம் பிற்பகல் முறியடிக்கப்பட்டுள்ளது. கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலி பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக புலனாய்வுத் துறைக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து பொலிஸார் கெற்பேலி விடத்தற்பளை பகுதியில் வைத்து மண் ஏற்றிய உழவு இயந்திரத்தை மடக்கிப் பிடித்ததுடன், அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர். கைதான நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தமிழ் தேசியக் கூட்டமைப்பை சிலர் பலவீனப்படுத்துவதற்கு முயற்சி

கோப்பாய் குறூப் நிருபர்

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தனிநபர் சுமந்திரன் எவ்வாறு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவை வெளியேறுமாறு கூற முடியுமென புளொட் அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கேள்வி எழுப்பினார்.

நேற்று (04) கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,



அவர் மேலும் தெரிவிக்கையில் ரெலோ அமைப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாக விளங்குகின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் தனிநபராக இருக்கின்ற சுமந்திரன் ஒரு கட்சியை வெளியேறுமாறு கூறுவதற்கு அருகதை அற்றவர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை சிலர் பலவீனப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்தினால் தமிழ் மக்களை பலவீனப்படுத்துவதாக அமையும்.

சுமந்திரனின் கருத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள தனிநபர் ஒருவருடைய கருத்தாகவே பார்க்க முடியும்.

ஆகவே இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை பங்காளி கட்சிகள் விரைவில் சந்தித்து எமது கண்டனத்தை தெரிவிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.




தென்பகுதியை சேர்ந்த ஊடகவியலாளர்கள் அண்மையில் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து முல்லைத்தீவு ஊடகவியலாளர்களால் கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. படம்: மாங்குளம் குறூப் நிருபர்

## நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்தல்

கிளிநொச்சி குறூப் நிருபர்

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து மக்களின் நாளாந்த தேவைக்கு ஏற்ற அளவில் நீரை சுத்திகரித்து விநியோகிக்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி மாவட்டங்களில் இனிவரும் நாட்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நீர்விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளதாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இந் நிலைமையினை கருத்திற் கொண்டு பொது மக்கள் நீரைசிக்கனமாக பயன்படுத்துமாறும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

## காணி பிரச்சினைக்கு தீர்வு

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி சின்ன பல்லவராயன் கட்டு காணிகள் தொடர்பில் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பதில் கிடைக்கப் பெற்றதும் குறித்த காணிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என புனகரி பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சின்ன பல்லவராயன்கட்டு கிராம அலுவலர் பிரிவில் நீண்டகாலமாக குடியிருக்கும் மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் இதுவரை வழங்கப்படாமல் இருப்பதாகவும் குறித்த காணிகளுக்கான காணி அனுமதிப் பத்திரங்களை பெற்று தருமாறு கோரியுள்ளனர்.

எனவே குறித்த காணிகளுக்கான காணி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சின்ன பல்லவராயன்கட்டு காணிகள் தொடர்பில் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்திற்கு இது தொடர்பில் கடிதம் அனுப்பியுள்ளதாகவும் அதற்கான பதில் கிடைக்கப் பெற்றதும் குறித்த காணிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என புனகரி பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமரர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் ஓராண்டு நினைவேந்தல்







ஒடுக்கப்பட்ட இனத்தின் உரிமைக்குரலாய் பல சவால்களுக்கு மத்தியிலும் விடுதலைக்காய் போராடிய யோசேப்பு ஆண்டகையின் ஓராண்டு நினைவேந்தல் மன்னாரில் இடம்பெற்றது.

தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இதன் தலைவர் வீ.எஸ்.சிவகரனின் தலைமையில் மன்னார் நகர சபை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மட்டக்களப்பு திருமலை மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் பேரருட் கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையுடன் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பனை மரத்தை நம்பி 20 ஆயிரம் குடும்பங்கள்

சாவகச்சேரி விசேட நிருபர்

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இருபதாயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் பனை மரத்தில் தங்கியிருப்பதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார். அண்மையில் கைதடி பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

வடமாகாணத்தில் கணிசமான குடும்பங்கள் பனையை அடிப்படையாகக் கொண்ட தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களின் ஜீவனோபாயம் நேரடியாகவும் மறைமுகமாகவும் பனை மரத்துடன் தொடர்புடையதாக காணப்படுகிறது.

பனை அபிவிருத்திச் சபை உற்பத்தியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கும் சேவையை விஸ்தரித்து வருகிறது. பனை அபிவிருத்திச் சபையின் நடவடிக்கை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதோடு நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் பங்களிப்பு செய்துவருகின்றது. மேலும் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது மாகாணத்தில் பல சேவைகளை ஆற்றி வருகிறார்.

# உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல உலகை மீட்க வந்தவர் இயேசு

தவறு செய்வதற்குச் சூழ்நிலையை உருவாக்கிவிட்டு தவறியவனைத் தண்டிப்பதற்குத் தயாராகும் சமூகம், சட்டத்திற்குள் தன்னை தனது பொறுப்பற்ற தன்மையை மறைத்துப் பாதுகாத்துக் கொள்கிறது.

கற்பு என்பது மனத்தளவில் தான். "ஒரு பெண்ணை இச்சையோடு நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கனவே அப்பெண்ணோடு விபச்சாரம் செய்தாயிற்று" (மத். 5:28). என்கிறது பரிசுத்த வேதாகமம்.

விபச்சாரச் செயலுக்குப் பொறுப்பேற்கும் பல புறசக்திகள் வறுமை, அறியாமை, வன்முறை, பாலியல் ஆகியவை. ஆனால் விபச்சார எண்ணத்துக்கு அவரவரே பொறுப்பேற்க வேண்டும். உள்ளத்தின் நிறைவால் வாய் பேசும்.

மனத்தில் எதை அசைபோடுகிறோமோ அதுவே நம்மையும் அறியாமல் வெளிப்படுகிறது. நம் மனம் அசைபோடும் அழுக்குகளை வைத்தே நாம் பிறரையும் எடைபோடுகிறோம். பாலியல் தொடர் பாடலை பற்றிச் சொல்லவே வேண்டாம். அவல் கிடைத்த மாதிரி.



தவறு செய்வதற்குச் சூழ்நிலையை உருவாக்கிவிட்டு தவறியவனைத் தண்டிப்பதற்குத் தயாராகும் சமூகம் சட்டத்திற்குள் தன்னை தனது பொறுப்பற்ற தன்மையை மறைத்துப் பாதுகாத்துக் கொள்கிறது.

உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, அதை மீட்க வந்தவர் இயேசு (யோ. 3:17). நம் கவனத்தை ஈர்ப்பது இயேசு அந்தப் பெண்ணைத் தீர்ப்பிடவில்லை என்பது மட்டுமல்ல. தீர்ப்பிட வந்தவர் எவரையும் தீர்ப்பிடவில்லை என்பதுதான்.

''உங்களில் குற்றமில்லாதவன் முதற்கல்லை எறியட்டும். தீர்ப்பிட வேண்டும் என்று வந்தவர்களுக்குத் தீர்ப்பிட வாய்ப்பளிக்கிறார். ஆனால் தீர்ப்பிடத் தகுதியற்றவர்கள் என்று அவர்களை வைத்து இயேசு நிகழ்த்திய மாபெரும் அற்புதம்.

நாம் அனைவரும் பாவிகள். (1 யோ. 18). ''என் இதயத்தைத் தூயதாக்கிவிட்டேன். நான் பாவம் நீக்கப் பெற்றுத் தூய்மையாய் இருப்பவன் என்று யாரால் சொல்லக் கூடும்?" நீதிமொழிகள் 20:9 விடும் சவால் இது!

"நல்லவர்கள் எல்லோரும் வெள்ளையாகவும் தீயவர்கள் எல்லோரும் கருப்பாகவும் கடவுளின் படைப்பில் இருப்பார்கள் என்று வைத்துக் கொண்டால் நாம் எப்படி இருப்போம்?" என்று ஆசிரியர் கேட்க ஒரு மாணவன்: 'வரிக்குதிரை போல இருப்போம் என்றாராம்.வரி வரியா கோடு கோடா கருப்பும் வெள்ளையுமாகக் கலந்து". அறிவார்ந்த பதில்! எந்த மனிதனும் முழுமையாக நல்லவனுமில்லை. முழுமையாகக் கெட்டவனுமில்லை.

தன்னிலை உணர்ந்தவர்களாய் நாமும் ''கடந்ததை மறந்துவிட்டு முன்னிருப்பதைக் கண்முன் கொண்டு பரிசு பெற வேண்டிய இலக்கை நோக்கித் தொடர்ந்து ஓடுவோம்" (பிலி 3:1314)

"நானும் தீர்ப்பிடேன் இனிப் பாவம் செய்யாதே". எவ்வளவு பொருத்தமான பதில்! இது அவளுக்குப் பாவம் செய்யக் கொடுக்கப்பட்ட அனுமதிச் சீட்டு அன்று. மறுவாழ்வு தந்த மாமருந்து!

பாவிகள் எல்லோரும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் அல்ல. மன்னிக்கப்பட வேண்டியவர்கள் என்பது இயேசுவின் புதிய சட்டம்.

நேற்றையப் பொழுதை இறை இரக்கத்துக்கு விட்டுவிடு

இன்றையப் பொழுதை இறையன்பில் செலவிடு

நாளையப் பொழுதை இறை நம்பிக்கையில் விடியவிடு.

அருட்பணி
**வை.இருதயராஜ்...**

# திருத்தூதர் பவுலின் நிலத்தடி கெபியில் திருத்தந்தை விளக்கேற்றி வேண்டுதல்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தமது திருத்தூதுப் பயணத்தில் கடந்த ஞாயிறு காலை மோல்டோவின் ராபாட் நகரில் அமைந்துள்ள திருத்தூதர் பவுலின் நிலத்தடிக் கெபிக்குச் சென்று செபித்து வேண்டுதல் விளக்கு ஒன்றை ஏற்றி வைத்தார்.

வெள்ளி மற்றும் பித்தளை கனிமங்களாலான 120 செ.மீ. உயரமுள்ள விளக்குத் தண்டையும் மூன்று கிளைகளையும் கொண்டிருக்கும் இவ்விளக்கின் அடிப்பாகத்தில் அமைதி என்றும் அதன் மேல்பாகத்தில் திருத்தந்தையின் தலைமைப்பணி விருதுவாக்கு இலச்சினையும் பொறிக்கப்பட்டுள்ளன.



மோல்ட்டா மக்கள் அதிகமாகத் திருப்பயணம் மேற்கொள்ளும் இடங்களில் ஒன்றான இக்கெபியில் திருத்தந்தை இறை வேண்டல் செய்தார். புனித பவுல் நிலத்தடி கெபியில் செபித்த பின்னர் தங்கப் புத்தகத்திலும் திருத்தந்தை கையெழுத்திட்டார்.

புறவினத்தாரின் திருத்தூதரும் அந் நாட்டு மக்களின் நம்பிக்கையின் தந்தையுமாகவும் நினைவுகூரப்படும் புனித பவுலுக்காக ஆண்டவருக்கு நன்றி கூறுகிறேன். ஆறுதலின் உணர்வு மற்றும் நற்செய்தி அறிவிப்பில் பேரார்வம் ஆகியவற்றை மோல்ட்டா மக்களுக்கு எப்போதும் வழங்குமாறு அப் புனிதரிடம் மன்றாடுகிறேன் என்று திருத்தந்தை அப்புத்தகத்தில் எழுதினார். பின்னர் புனித பவுல் பசிலிக்காவுக்குச் சென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பல்சமயத் தலைவர்கள் 14 பேரையும நோயாளிகள் சிலரையும் சந்தித்து ஆசீர்வதித்தார்.

அதற்குப் பின்னர் அங்கிருந்து பத்து கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஃபிளோரியானா நகரின் கிரனாய் வளாகத்திற்குச் சென்ற திருத்தந்தை அங்கு அமர்ந்திருந்த இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட நம்பிக்கையாளர்கள் மத்தியில் திறந்த காரில் வலம் வந்து இஞ்ஞாயிறு திருப்பலியை ஆரம்பித்தார்.

யோவான் நற்செய்தி பிரிவு 8ல் பதிவு செய்யப்பட்டுள்ள விபசாரத்தில் பிடிபட்ட பெண் பற்றிய கடந்த ஞாயிறு நற்செய்தியை மையப்படுத்தி திருத்தந்தை மறையுரையாற்றினார்.

இயேசுவோடு இருக்கும் போது புதிய மற்றும் வித்தியாசமான ஒரு வாழ்வு எப்போதும் இயலக்கூடியதே என்றுகூறி மோல்ட்டா மக்களை நம்பிக்கையில் ஆழப்படுத்தியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**மேரி தெரேசா...**




# தேவத்தையில் சிலுவைப்பாதை தியானம்









தவக்காலத்தையொட்டி கொழும்பு திம்பிரிகஸ்யாய பங்கு மக்கள் தேவத்தை இலங்கை மாதா பெசிலிக்கா பேராலயத்தில் சிலுவைப்பாதை தியானமொன்றை கடந்த சனிக்கிழமை மேற்கொண்டனர். சிலுவைப் பாதை தியானத்தை அருட்தந்தை டிலான் ரொஜர் அடிகளார் வழிநடத்தினார். நற்செய்தி, ஆண்டவர் மீதான நம்பிக்கை, ஆசீர்வாதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாக ஒவ்வொரு நிலையிலும் அருட்தந்தையின் சிறப்பு வழி நடத்தல்கள் அமைந்தன. சிலுவைப்பாதை தியானத்தையடுத்து சிறப்புத் திருப்பலி அருட்தந்தையவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. நாட்டின் தற்போதைய சூழ்நிலை, மக்கள் எதிர் கொள்ளும் இன்னல்களுக்கு தீர்வு கிடைக்க இறையருள் வேண்டி விசேட மன்றாட்டுக்கள், வேண்டுதல்கள் திருப்பலி பூசையின் போது முன்வைக்கப்பட்டன. சிலுவைப்பாதை தியானம் மற்றும் திருப்பலி பூசை, தியானத்தில் பங்கேற்ற விசுவாசிகள் தொடர்பான படங்களைக் காணலாம்.

(படங்கள்,தகவல்: மிலியன் ஜேம்ஸ்)

# ஆண்டவர் விரும்பும் தவக்கால ஒறுத்தல்கள்

பக்தன் ஒருவன் கடுந்தவம் புரிந்துவந்தான். ஒரு நாளில் அவன் கடவுளிடத்தில் முறையிடத் தொடங்கினான்.

“கடவுளே! நான் என்னுடைய மதம் போதிக்கின்ற எல்லாக் கோட்பாடுகளையும் தவறாமல் கடைப்பிடித்து வருகிறேன்; கடுந்தவம் புரிந்து நேரம் தவறாமல் ஜெபித்து வருகிறேன். அப்படி இருக்கும்போது என்னை ஆசீர்வதிக்காமல் என்னுடைய பக்கத்து வீட்டுக்காரனை ஆசீர்வதித்திருக்கிறீர்கள்? இது உங்களுக்கே நியாயமா? அவன் ஒரு குடிகாரன், ஒழுக்கம் கெட்டவன். ஒருபோதும் ஜெபிப்பதில்லை. அவனைப் போய் ஆசீர்வதித்திருகிறீர்களே?” என்றான்.

உடனே கடவுள் அவனுக்கு முன்பாகத் தோன்றி, “அவனை நான் ஆசீர்வதிப்பதற்குக் காரணம், அவன் உன்னைப் போன்று வளவளவென்று பேசி என்னைப் போரடிக்கமாட்டான், அதனால்தான்” என்றார்.

ஜெபம் என்று சொன்னால் வார்த்தைகளை அடுக்கிக்கொண்டே போகவேண்டும் என்று நினைப்பவர்களுக்கு இக்கதை ஒரு சாட்டையடி.

நற்செய்தியில் இஸ்ரயேல் மக்கள் கடவுளிடம், “நாங்கள் உண்ணா நோன்பிருந்த பொழுது நீர் எங்களை நோக்காதது ஏன்?, நாங்கள் எங்களைத் தாழ்த்திக் கொண்டபோது நீர் எங்களைக் கவனியாதது ஏன்? என்று முறையிடுகிறார்கள்.

அதற்கு கடவுள், “ ஒருவன் தன்னை ஒடுக்கிக்கொள்ளும் நாளையா நான் உண்ணாநோன்பின் நாளாகத் தெரிந்து கொள்வது? ஒருவன் நாணலைப் போல் தன் தலையைத் தாழ்த்திச் சாக்கு உடையையும் சாம்பலையையும் அணிந்து கொள்வதா எனக்கு ஏற்ற நோன்பு? இதையா நீங்கள் நோன்பு என்றும் ஆண்டவருக்கு உகந்த நாள் என்றும் அழைக்கின்றீர்கள்?. கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும் நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும் எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்துகொள்ளும் நோன்பு! பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும் உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு” என்கிறார்.

ஆக உண்மையான நோன்பு அல்லது ஜெபம் என்பது வறியவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து, அவர்களை மனித மாண்போடு நடத்துவது தானே ஒழிய ஜெபத்தை தவறாது சொல்லிக் கொண்டிருப்பது அல்ல. நற்செய்தி கூட நோன்பு பற்றிய கேள்வி எழுகிறபோது, யோவானின் சீடர்கள் இயேசுவிடம், “நாங்களும், பரிசேயர்களும் நோன்பு இருக்கிறபோது உம்முடைய சீடர்கள் மட்டும் ஏன் நோன்பிருப்பதில்லை?” என்று கேட்கிறபோது இயேசு, “மணமகன் மணவீட்டாரோடு இருக்கும்போது நோன்பிருக்க முடியுமா?, மணமகன் மனவீட்டாரைப் பிரியவேண்டிய காலம் வரும். அப்போது அவர்கள் நோன்பிருப்பார்கள்” என்கிறார்.

இங்கே இயேசு கிறிஸ்து நோன்பிருக்க ஒரு காலம் உண்டு என்று சொல்லி அவர்களுக்கு பதிலடி தருகிறார்.

பொதுவாக பெரியவர்கள் சொல்லக் கூடிய கருத்து “மதத்தைப் பின்பற்றுவது ஒருவரின் தனிப்பட்ட உரிமை. அதில் மற்றவர்கள் மூக்கை நுழைக்கக்கூடாது” என்று. யோவானின் சீடர்கள் தவறாது நோன்பிருந்ததில் எந்தவிதத் தவறும் இல்லை.

அதற்காக இயேசுவின் சீடர்களும் நோன்பிருக்கவேண்டும் என்று வற்புறுத்தியதுதான் மிகப்பெரிய தவறு.

அருட்பணி **அந்தோனிராஜ்...**



# கிழக்கின் குரல்



காட்டு யானைகளின் தொல்லையால்

## வாழ்வாதார தொழிலை கைவிடும் நிலையில் மக்கள்





**கல்குடா தினகரன் நிருபர்**

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புணாணை கிழக்கு கிராம அதிகாரி பிரிவிலுள்ள குகனேசபுரம் பகுதிக்குள் நேற்று அதிகாலை வேளையில் காட்டு யானைகள் புகுந்து பெறுமதியான தென்னை மரங்கள், தோட்டப்பயிர்கள் மற்றும் வீடு என்பவற்றை சேதப்படுத்தியுள்ளன.

இப்பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதுடன், பெறுமதியான தென்னை, மா, பலா போன்ற மரங்களும் காய்கறிப் பயிர்களும், மரவள்ளி தோட்டம் மற்றும் ஒரு வீடு என்பவற்றை காட்டு யானை சேதப்படுத்தியுள்ளது. இதனால் இப்பிரதேசத்தில் வதியும் மக்கள் உயிர் அச்சுறுத்தலுடன் வாழ்ந்து வருவதுடன், பாரிய நஷ்டங்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

இப்பிரதேசத்திற்குள் நுழையும் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த நிரந்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் தொடர்ச்சியாக இவ்வாறான அழிவுகளைத் தவிர்க்க முடியாத சூழ்நிலை காணப்படுவதாகவும், கடந்த மாதமும் குறித்த பகுதிக்கு காட்டு யானைகள் வருகை தந்து சேதப்படுத்தி சென்றுள்ளதாக இப்பிரதேச விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் ஏற்பட்டுள்ள சூழ்நிலைக்கு மத்தியிலும்; பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் அவற்றினை சீர்செய்து பராமரித்து வந்த நிலையில் மீண்டும் யானைகள் சேதப்படுத்திச் சென்றுள்ளதால். விவசாயத்தினை கைவிட்டு விட்டு நஞ்சை அருந்தி மரணிப்பது மேல் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நிரந்தரத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் யானை வேலி அமைத்து தருவதுடன், எங்களது உயிர்களையும், பயிர்களையும் பாதுகாக்க உதவ வேண்டுமென இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்திற்கு

## 25 தாதிய உத்தியோகத்தர்களுக்கான இணைப்புக் கடிதங்கள் வழங்கல்

**நிந்தவூர் குறூப் நிருபர்**



மத்திய சுகாதார அமைச்சினால் நியமனம் வழங்கி வைக்கப்பட்ட தாதிய உத்தியோகத்தர்களில் 25 பேர் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான இணைப்புக் கடிதம் வழங்கி வைக்கும் நிகழ்வு, நேற்று (04) கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் கலந்து கொண்டு இணைப்புக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

இங்கு உரையாற்றிய கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்;

அரச பதவி வகிப்பவர்கள் சுறுசுறுப்பாகவும் சேவை மனப்பாங்குடனும், நேர்த்தியாகவும், மக்களிடம் இன்முகத்துடனும் தங்களது வேலைகளை செய்ய வேண்டும். அப்போதுதான் அத்தொழிலுக்கு மகிமையும், உயர்வும் கிடைக்கின்றது. அதுமாத்திரமல்லாமல், ஒரு நிறுவனத்தில் சேவை புரிகின்ற அரச ஊழியர்கள் சிறந்த சேவை மனப்பாங்குடனும், சிறப்பாகவும் தமது சேவைகளை மக்களுக்காக வழங்கி வருகின்றபோதுதான் அந்த நிறுவனத்திற்கு வெற்றியும் உள்ளது.

மக்கள் சேவையை பெறுவதற்காக வரும்போது சேவை வழங்குனர்களின் நடத்தையை அவதானித்து தங்கள் மனதிலே சேவை வழங்குனர் குறித்து பதித்துக் கொள்கின்றனர். அவ்வாறான மனப்பதிவுகள் சிறப்பாக இருக்கும் போதுதான் சேவையாளன் வழங்குகின்ற சேவையில் திருப்தி கொள்கின்றார்கள். அந்த நல்லதொரு மனப்பதிப்புக்களை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

## சிறுபோக நெற்செய்கை விதைப்புப் பணிகள்; நிறைவு செய்ய காலக்கெடு விதிப்பு

**ஒலுவில் விசேட நிருபர்**

அக்கரைப்பற்று பிராந்திய நீர்ப்பாசனப் பிரிவில் சிறுபோக நெற்செய்கை விதைப்புப் பணிகளை எதிர்வரும் 10ம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்ய வேண்டுமென, அக்கரைப்பற்று பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் ரீ. விவேக்சந்திரன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிராந்திய நீர்ப்பாசனப் பிரிவில் வலது கரை வாய்க்கால் நீர்ப்பாசனத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று, தீகவாபி, இலுக்குச்சேனை ஆகிய மூன்று வலயங்களில் மொத்தம் 22 ஆயிரத்து 894 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வலது கரை வாய்க்கால் நீர்ப்பாசனப் பிரிவில் எதிர்வரும் 07ம் திகதிக்கு முன்னர் விதைப்புப் பணிகளை நிறைவு செய்ய வேண்டுமெனவும் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிராந்திய நீர்ப்பாசனப் பிரிவில் ஆற்றுப் பாய்ச்சலுக்குட்பட்ட வீரையடி பிரதேச நெற்காணிகளில் 04 ஆயிரத்தி 706 ஏக்கரில் நெற்செய்கை பண்ணப்படவுள்ளது.

இக் காணிகளில் எதிர்வரும் 10ம் திகதிக்கு முன்னர் விதைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பிராந்திய நீர்ப்பாசனப் பிரிவில் மொத்தம் இம்முறை 27 ஆயிரத்தி 600 ஏக்கரில் நெற் செய்கை பண்ணப்படவுள்ளதோடு, சிறுபோக நெற்செய்கைக்கு அனுமதிக்கப்படாத காணிகளுக்கு எக்காரணம் கொண்டும் நீர் விநியோகிக்கப்படாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அக்கரைப்பற்றில் சமுர்த்தி திணைக்களத்தினால் வீடு கையளிப்பு



**அக்கரைப்பற்று மத்திய நிருபர்**

சமுர்த்தி சௌபாக்கியா வாரம் திட்டத்தின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஆறு இலட்சம் ரூபாய் நிதியில் அக்கரைப்பற்றில் நிர்மணிக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வு சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எம்.பி.எம். ஹூசைன் தலைமையில் அக்கரைப்பற்றில் நடைபெற்றது. அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சார் கலந்து கொண்டு வீட்டினை உரியவரிடம் கையளித்தார். இதன் போது சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் என பொது மக்களும் கலந்து கொண்டனர்.

## காதுகள் துண்டாடப்பட்டு தங்க நகை அபகரிப்பு

**ஒலுவில் விசேட நிருபர்**

பொத்துவில் பசரிச்சேனை பிரதேசத்தில் வீட்டினுள் புகுந்து 70 வயது மூதாட்டியின் இரண்டு காதுகளும் துண்டாடப்பட்டு தங்க நகை அபகரிக்கப்பட்டுள்ளதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

காயங்களுக்குள்ளானவரின் கணவர் சனிக்கிழமை (02) காலை வீட்டை விட்டு வெளியில் சென்ற போதே இச்சம்பவம் சனிக்கிழமை (02) மாலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பலத்த காயங்களுக்குள்ளானவர் ஆபத்தான நிலையில் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றார். இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பேராசிரியர் சந்திரசேகரத்தின் இழப்பு

## கல்வி சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்

பேராசிரியர் கலாநிதி எஸ்.எல். றியாஸ்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பீடாதிபதியாக பதவி வகித்து ஓய்வுபெற்ற பேராசிரியர் சந்திரசேகரம் பின்னர் அரச கரும மொழிகள் ஆணைக் குழுவின் தலைவர் போன்ற பல முக்கியமான பதவிகளை வகித்தார். மலையக மக்களுக்கென்று தனியான பல்கலைக்கழகம் வேண்டும் என்ற கோரிக்கையை நீண்டகாலமாக வலியுறுத்தி வந்த அவர் மலையக மக்களின் அரசியல் அபிலாசைகளுக்காக குரல் கொடுக்கும் இயக்கங்களுடன் தன்னை அடையாளப்படுத்தி பல பணிகளை முன்னெடுத்தவர்.

கல்வியியல் துறைப் பிரச்சினைகளைப் பற்றி பேராசிரியர் எண்ணற்ற கட்டுரைகளை பத்திரிகைகளில் எழுதிவந்தார். பல நூல்களையும் அவர் எழுதியிருக்கிறார்.

அன்னாரின் மறைவு கல்வி சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என தனது அனுதாப செய்தியில் சமாதான கற்கை நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எல்.றியாஸ் குறிப்பிட்டுள்ளார்.

## பாராட்டி கௌரவிப்பு

**பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்**



அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் பீ.ஓ.டீ. அமைப்பின் ஏற்பாட்டில் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு ஒலுவில் கிறீன்வாசல் மண்டபத்தில் நடைபெற்றது.

அமைப்பின் தலைவரும் ஓய்வுபெற்ற கிராம சேவை நிருவாக உத்தியோகத்தர் எம்.எம்.அஜ்வத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட உயர் நீதிமன்ற நீதிபதி அல் ஹாபிழ் என். எம்.அப்துல்லாஹ் பிரதம அதிதியாகவும், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் முன்னாள் தேசியத்தலைவர் எம்.ஐ.உதுமாலெவ்வை உட்பட அமைப்பின் உறுப்பினர்கள் ஆலோசகர்கள் அதிதிகளாகவும் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின் போது அக்கரைப்பற்று மாநகர சபையின் கணக்காளராக கடமையாற்றி இடமாற்றம் பெற்று அம்பாறை பிரதேச செயலக கணக்காளராக கடமையேற்றுள்ள எம்.எப்.பர்ஹானை பாராட்டி பிரதம அதிதியினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மடத்தடி மீனாட்சியம்மன் ஆலயத்தில் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு

**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீமீனாட்சி அம்மன் ஆலயத்தில் கன்னி கும்பாபிஷேகத்திற்கான எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று (4) திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வர குருக்கள் தலைமையில் இந்த கிரியைகள்(2) ஆரம்பமாகின. எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இன்றும் (5) பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளது.

ஆலய தலைவர் கி.ஜெயசிறில் தலைமையிலான அறங்காவலர் சபையினர் 3 மாதகாலத்துள் கும்பாபிஷேகம் நடாத்த ஏற்பாடுகள் செய்திருந்தனர். நாளை (6) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் ஆவர்த்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

## தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும் போராட்டத்தில்



**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு வலியுறுத்தி, அம்பாறை மாவட்டம் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் தீப்பந்தம் ஏந்தியவாறு தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்றலில் நேற்று முன்தினம் (03) இரவு 7.30 மணியளவில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மூவினங்களையும் சேர்ந்த சுமார் 300 மாணவர்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு மாணவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை அபயபுர சுற்று வட்டத்தில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



**ரெட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை அபயபுர சுற்று வட்டத்தில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டமொன்று நேற்று (04) முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்கள் என்பவற்றைச் சுட்டிகாட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டதுடன் பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர். இதன்போது 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டதுடன் பொதுமக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவில்

## ஒலிபெருக்கி பாவனையை தடைசெய்யுமாறு வேண்டுகோள்

**அக்கரைப்பற்று மத்திய நிருபர்**


அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் பாதைகளில்

ஒலிபெருக்கி மூலம் வர்த்தகம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதனால் பொது மக்கள் பாரிய சிரமங்களுக்கு உட்பட்டுள்ளனர். இதனை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு உரிய அதிகாரிகளிடம் பொதுமக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

அக்கரைப்பற்று பிரதேச பிரதான மற்றும் உள் வீதிகளில் சிறிய வர்த்தகர்கள் முதல் பெரிய வர்த்தகர்கள் வரை கூடுதலான ஒலி எழுப்பக் கூடிய ஒலி பெருக்கிகளை பாவித்து வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதனால் மாணவர்கள் உட்பட்ட குழந்தைகளும், பொதுமக்களும் தங்களது இயல்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் சிரமப்பட்டு வருகின்றனர். பகல் வேளையிலும் இரவு நேரங்களிலும் இவ்வாறான கூடிய ஒலியுடன் வியாபாரம் செய்து வருகின்றனர்.

இதனால் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்கள், சிறிய குழந்தைகள் மிகக் கூடுதலாக பாதிக்கப்பட்டுள்ளனர். தங்களது வீடுகளில் தூங்க முடியாத வண்ணமும், மாணவர்கள் மாலை வேளையில் மீட்டற் பயிற்சிகளை மேற்கொள்ள முடியாமலும் தவித்து வருகின்றார்கள். பாரிய ஒலி மாசு ஏற்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட காலத்தில் சிறுவர்கள் உட்பட்ட முதியோர்களுக்கு செவி தொடர்பான நோய்கள் ஏற்படுவதுடன், எதிர்காலத்திலும் அவை அதிகரிக்கலாம் என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

# மலைச்சாரல்



# தலவாக்கலை நகரில் கடும் வாகன நெரிசல்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)





தலவாக்கலை நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தை சூழ மக்கள் நேற்று நீண்டவரிசையில் காத்திருந்தனர். அத்துடன், வாகனங்களும் அணிவகுத்து நின்றன. இதனால் நகர் பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

நாடளாவியரீதியில் டீசலுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், தலவாக்கலை நகரிலுள்ள எரிபொருள் நிலையத்திலும் டீசல் இருக்கவில்லை. சுமார் மூன்று நாட்களுக்கு பிறகு நேற்றைய தினமே டீசல் விநியோகிக்கப்படுகின்றது.

டீசல் இன்மையால் பலரின் வாகனங்கள் வீடுகளிலும், வீதிகளிலும் அப்படியே நிற்கின்றன.

சுமார் 20 லீற்றர் கேன்களுடன் சாரதிகள், நீண்ட வரிசையில் காத்திருந்தனர். இதேவேளை, வாகனங்களும் நீண்ட வரிசையில் நிற்பதை காணமுடிந்தது. பாதுகாப்பு கடமையில் பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர்.

# இணைய வசதி இல்லை தோட்ட; கிராமிய மாணவர்கள் பாதிப்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் பெரும்பாலான பிரதேசங்களில் இணைய வசதிகள் இன்மையால் மாணவர்களின் மேலதிக கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருவதாக மாணவர்கள், பெற்றோர் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

கொவிட் 19 நெருக்கடி காலத்தில் ஒன்லைன் வகுப்புக்கள் அறிமுகமாகிய போதிலும் பிரதேசத்தின் பெரும்பாலான மாணவர்களால் பிரயோசனத்தை அடைய முடியவில்லை. தற்போது பாடசாலை ஆசிரியர்கள் விடுமுறை நாட்களிலும் காலை, மாலை நேரங்களிலும் மேலதிக வகுப்புக்களை நடத்துவதால் வாய்ப்புக்கள் பிரதேச மாணவர்களுக்கு கிடைப்பதில்லை எனவும் இரத்தினபுரி மாவட்டத்தில் பெரும்பாலான கிராம தோட்டப் பகுதிகளுக்கு இதுவரை இணைய வசதிகள் இல்லை எனவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கல்வி அமைச்சு கல்வித் திணைக்களங்கள் கூட மாணவர்களின் நலன் கருதி மேலதிக ஒன்லைன் வகுப்பு கற்பித்தல் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ள போதிலும் இணைய வசதியற்ற பிரதேச மாணவர்களுக்கு இணையக்கல்வி ஒரு எட்டாக்கனியாகவே இருந்து வருகிறது. எனவே இணைய வழி கற்பித்தல் ஏழை மாணவர்களுக்கு எவ்விதப் பயனுமில்லையென கவலை தெரிவிக்கின்றனர்.

# தூர இடங்களுக்கு பஸ்கள் சேவையில் இன்மையால் பயணிகள் அசௌகரியம்

ஹற்றனிலிருந்து தூர இடங்களுக்கான தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடாமையால் பயணிகள் அசௌகரியத்துக்கு உள்ளாகினர். நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று காலை 6 மணியுடன் நீக்கப்பட்டிருந்தது. எனினும் டீசல் பிரச்சினை காரணமாக, அதிகமான தனியார் பஸ்கள் நேற்று(4) சேவையில் ஈடுபடவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இ.போ.ச பஸ்கள் சேவையில் ஈடுபட்டிருந்தாலும் அவை போதுமானளவு சேவையில் ஈடுபடவில்லை என்றும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

ஹற்றனிலுள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றும் நீண்ட வரிசை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சட்டத்தரணி காரியாலயங்களில் திருடர்கள் கைவரிசை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை நகரில் அமைந்துள்ள சட்டத்தரணிகளின் காரியாலங்களின் திருட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவங்கள் குறித்து பலாங்கொடைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். காணாமல் போன பொருட்கள் மற்றும் ஆவணங்கள் குறித்து தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை பலாங்கொடை நகரம் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் இரவு பகல் வேளைகளில் திருட்டுச்சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றமை குறித்து முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. போதைக்கு அடிமையானவர்கள் இக்கொள்ளை சம்பவங்களுடன் தொடர்பு பட்டிருப்பதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். பாதுகாப்புத் தரப்பினர் இவ்விடயத்தில் இதை விட அதிக அக்கறை செலுத்த வேண்டும் என பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# நுவரெலியா நகரில் ஆர்ப்பாட்டம்

(நுவரெலியா தினகரன் நிருபர்)



நுவரெலியா நகரில் நேற்று (4) திங்கட்கிழமை காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை பொதுமக்கள் முன்னெடுத்தனர்.

அரசாங்கத்திற்கு எதிராக பொதுமக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளான இளைஞர்களும் ஒரு சில பௌத்த மத குருமார்களும் கலந்துக் கொண்டனர்.

ஆர்ப்பாட்ட ஊர்வலம் நகர வீதிகளில் வரும் பொழுது ஒரு சில நகர வர்த்தகர்கள் கடைகளை மூடி ஆதரவு வழங்கினார்கள். ஆர்ப்பாட்ட போராட்டத்தால் பலமணி நேரம் வீதிகளில் வாகன நெரிசலும் ஏற்பட்டது.

நுவரெலியா பிரதான தபாலகத்திற்கு அருகில் ஒன்று சேர்ந்த பொது மக்கள் நுவரெலியா எலிசபெத் வீதி, லோசன் வீதி,கண்டி வீதி, சந்தன லால் கருணாரட்ன வீதி, பழையகடை வீதி,புதியகடை வீதி, பிரதான பஸ் தரிப்பு நிலையம்,வெளிமடை வீதி, தர்மபால சந்தியில் திரும்பி மீண்டும் பிரதான தபாலகத்திற்கு அருகில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மெழுகுவர்த்திகளுக்கு பாரிய தட்டுப்பாடு

நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ள மின் துண்டிப்பு காரணமாக உள்ளூர் சந்தைகளில் மெழுகுவர்த்திகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், மெழுகுவர்த்திகளின் விலையும் பாரியளவில் அதிகரித்துள்ளது. அதற்கமைய, ஹற்றனில் சிறிய மெழுகுவர்த்தியொன்று 15 ரூபாய்க்கும் பெரிய மெழுகுவர்த்தி 75 ரூபாய்க்கும் விற்கப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர். எனினும் நுகர்வோருக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவே மெழுகுவர்த்திகள் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# பொகவந்தலாவையில் பாரிய ஆர்ப்பாட்டம்



ஹற்றன் சுழற்சி நிருபர்)

நாட்டின் அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம் மற்றும் டீசல், மண்ணெண்ணை தட்டுப்பாடு போன்றவற்றுக்கு எதிராக பொகவந்தலாவை டின்சின் நகரில் நேற்று (4) பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை வெளியேறுமாறு கோஷங்கள் எழுப்பி பதாதைகளை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன், ஆர்ப்பாட்டத்தில் டின்சின் மற்றும் அப்பகுதியில் உள்ள சில தோட்டங்களைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.



ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணியின் ஏற்பாட்டில் கேகாலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

# பேராசிரியர் சோ.சந்திரசேகரம் காலமானார்



இலங்கையின் மூத்த கல்வியியல் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் தமது 78வது வயதில் காலமானதாக அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

மாரடைப்பு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது இறுதி கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

1944 டிசம்பர் மாதம் பிறந்த பேராசிரியர் சந்திரசேகரம், இலங்கையின் தமிழ் கல்வி வரலாற்றில் பாரிய பங்களிப்புக்களை செய்தவராவார். பதுளையை பிறப்பிடமாகக்கொண்ட பேராசிரியர் சோ. சந்திரசேகரம், கல்வியியல் துறையில் பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் ஹிரோசிமா பல்கலைக்கழக முதுமானி பட்டதாரியாவார்.

கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் துறை முன்னாள் பீடாதிபதியாகவும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் முன்னாள் அங்கத்தவராகவும் மற்றும் கொழும்பு தமிழ் சங்கத்தின் முன்னாள் தலைவராகவும் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் பணியாற்றினார்.

பேராசிரியர் சோ.சந்திரசேகரம், தமிழ், ஆங்கில, சிங்கள மொழிகளில் புலமை கொண்டவர் என்பதுடன் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

# சப்ரகமுவ மாகாணத்தில் 'ஆயுஷ் கிராம' வேலைத்திட்டம்



காவத்தை தினகரன் விசேட நிருபர்

சப்ரகமுவ மாகாண ஆயுர்வேத திணைக்களத்தினால் "ஆயுஷ் கிராமம்" வேலைத்திட்டம் அண்மையில் கேகாலை திபுல்கமுவ கிராமத்தில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கேகாலை மாவட்டத்தின் கேகாலை பிரதேச செயலகம் மற்றும் ருவான்வெல பிரதேச செயலகம் என்பன மையமாக கொண்டு 100 குடும்பங்களுக்கு மேற்படி வேலைத்திட்டம் முதலில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி வேலைத்திட்டத்தின் மூலம் மாதம் ஒரு முறை அனைத்து வீடுகளுக்கும் வைத்தியர் ஒருவர் நேரில் சென்று கண்காணிப்பது மற்றும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை நடமாடும் சேவை நடாத்துதல் உட்பட பல வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்திலும் நடைமுறைபடுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கேகாலை பிரதேச சபை தலைவர் ஜகத் ஜயசிங்க, சப்ரகமுவ மாகாண ஆயர்வேத திணைக்களத்தின் ஆணையாளர் டலஸ் பதிரகே உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



நோர்வூட் பிரதேச சபையின் கீழ் இயங்கும் டிக்கோயா புளியாவத்தை சிறுவர் முன்பள்ளி கொவிட் பரவல் காரணமாக இயங்காமல் இருந்தது.தற்போது மீண்டும் புத்துணர்ச்சியுடன் ஆரம்பிக்கப்பட்டதுடன் சிறுவர்களுக்கான விளையாட்டுப்போட்டியும் இடம்பெற்றது.





கடுகன்னாவை குருக்குத்தலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அக்குறணை பிரதேச சபை தலைவர் இஸ்திஹார் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் இந்நிகழ்வில் உடுனுவர பிரதேச சபை உறுப்பினர் ரிஸ்வி , குருக்குதலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ரிஸா செரீன் உட்பட ஆசிரியர்கள், சப்ரகமுவ மாகாண கல்வி திணைக்களத்தின் கணக்காளர் ஏ.சி.எம். அலி , பேராதனை பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ஏ.ஜே. எப். இஷானியா , மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் முன்னாள் கணக்காளர் ஏ.எம். ரீஸா உட்பட பாடசாலை மாணவ மாணவியர் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





பாராவிலா பிரதேசத்தில் சேதமடைந்திருந்த பாலர் பாடசாலை கட்டடம் புனரமைக்கப்பட்டு அண்மையில் இ.தொ.காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள்.

# நகர்வலம்



# கொழும்பில் நடைபெற்ற பாகிஸ்தான் சுதந்திர தின நிகழ்வுகள்



பாகிஸ்தானின் தேசிய தினம் கொழும்பிலுள்ள சங்ரில்லா ஹோட்டலில் அண்மையில் பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் உமர் பாருக் புர்கி தலைமையில் நடைபெற்றது. இவ்வைபவத்திற்கு பிரதம அதிதியாக வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன கலந்து கொண்டார். அத்துடன் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர்களான அலி சப்ரி, நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுத்தீன், மொஹமட் முசம்மில், இராணுவம் மற்றும் விமானப்படைத் தளபதிகள் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டுள்ளதை படங்களில் காணலாம். (அஷ்ரப் ஏ சமத்)

## வட மத்திய மாகாணம்;

# பாரிய கால்வாய் அபிவிருத்தி திட்டத்தில் பொதுமக்களுக்கு கூடுதல் பயன் கிடைக்கும்

### அநுராதபுரம் மாவட்ட மேலதிக செயலாளர்

**திறப்பனை தினகரன் நிருபர்**

வட மத்திய மாகாண பாரிய கால்வாய் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு நன்மை பயக்கும் வாய்ப்புக்கள் கிடைக்கவுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட மேலதிக செயலாளர் விஜே வன சிங்க தெரிவித்துள்ளார்.

வட மத்திய , வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள சுமார் 75 ஆயிரம் ஹெக்டயார் காணிகளில் வசிக்கும் மக்கள் இதன் மூலம் உரிய பிரதிபலனை அடையும் வாய்ப்பை பெறவுள்ளனர். இக் குறிப்பிட்ட மாகாணங்களில் வசிக்கும் பொது மக்களின் குடிநீர் வசதிகளும் இதன் மூலம் வழங்கப்படுவதற்கான வாய்ப்பும் இருப்பதாக இதன்போது அவர் தெரிவித்துள்ளார்.

திட்டத்தின் முதற்கட்ட பணிக்காக 88 ஆயிரம் மில்லியன் ரூபா பணம் செலவிடப்படவுள்ளது. இதன் மூலம் வலயத்தில் வசிக்கும் 1050 குடும்பங்கள் நன்மையடையவுள்ளதோடு மூன்று கட்டங்களில் இத் திட்டத்தை நிறைவு செய்ய எதிர் பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் இதற்கு தேவையான நிதி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டாகும் போது வட மத்திய மாகாண பாரிய கால்வாய் அபிவிருத்தி திட்டத்தை நிறைவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இத் திட்டத்தின் ஊடாக சுமார் 2,50,000 குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீர் வசதிகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் கிடைக்கப் பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அதிக விலைக்கு சீமெந்து விற்பனை;

# விநியோக உரிமையாளர்கள் 10 பேருக்கு அபராதம் விதிப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அதிகவிலைக்கு சீமெந்து மூடைகளை விற்கும் நோக்கத்துடன் மறைத்து வைத்ததாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட அநுராதபுரம் கட்டிட உபகரண வியாபார 10 விநியோக நிலையங்களின் உரிமையாளர்கள் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதன் பின்னர் அபராதமாக ஒரு இலட்சம் ரூபாவை செலுத்துமாறு அநுராதபுரம் மேலதிக நீதவான் ஹேமந்த புஷ்பகுமார மற்றும் கெக்கிராவ நீதவான் சமன் வெறனியகொட ஆகியோர் உத்தரவிட்டுள்ளனர்.

ஒரு கட்டிட பொருள் நிலையத்திற்கு தனித்தனியாக பத்தாயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட 500 சீமெந்து மூடைகளையும் அரச உடமையாக்குமாறும் நீதவான் மேலும் உத்தரவிட்டுள்ளார்.

நுகர்வோர் அதிகார சபையின் வடமத்திய மாகாண உதவிப் பணிப்பாளர் மஞ்சுல குணவர்தனவின் ஆலோசனைப்படி அநுராதபுரம் மாவட்ட அலுவலக பிரதானி பீ.ஏ.சீ.டீ.பெரேரா மற்றும் விசாரணைப்பிரிவின் அதிகாரி எல்.ஜீ.எஸ்.நாவிமன லஹிறு ஆரியவன்ச எ.எம்.ரசித், டீ.எஸ்.சதுராண மற்றும் டபிள்யூ.எம்.பீ.கே. விஜேபால உள்ளிட்ட குழுவினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தமை விசேட அம்சமாகும்.

# புத்தளம் மணல்குன்று பாடசாலை முகப்புத்தோற்றம் திறந்து வைப்பு



**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் மணல்குன்று பாடசாலையில் கட்டி முடிக்கப்பட்ட பாடசாலைக்கான முகப்புத்தோற்றம் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமினால் அண்மையில் திறந்துவைக்கப் பட்டது.

பாடசாலை அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் மணல் குன்று பிரதேச அமைப்பாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் சிபாரிசுக்கு அமைய அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீனின் 2019 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் பாடசாலைக்கான முகப்புத் தோற்றம் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு வருடமும் தேவையுடைய மாணவர்களை இனங்கண்டு பீ.சி.எம்.எச். நிறுவனத்தின் ஊடாக பாடசாலை புத்தகப்பைகள் வழங்கும் நிகழ்வும் பாராளுமன்ற உறுப்பினரின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.



கொழும்பு கல்வி வலயத்திற்குட்பட்ட தெமட்டகொட ஹைரியா பெண்கள் கல்லூரியில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் 8பேர் சிறந்த புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதாக பாடசாலையின் அதிபர் ஏ.எல்.எஸ் நஸீரா குஸைன் தெரிவித்தார். தமிழ் மொழி மூலம் ராசிதா றிவாஸ் (172), ஸக்கியா அரபாத் (163), ஹம்னா றிலாஸ் (160), மரியம் ஹமாஸ் (160), மரியம் றிஸ்னி (153), சிங்கள மொழி மூலம் ஆசிகா சுல்பிஹார் (156), அமானி அஸ்ஹர் (155), சுலைஹா இக்ரம் (152) சித்தியடைந்துள்ளனர். இவர்கள் வெற்றிபெற்ற மாணவர்கள் ஆசிரிய குழாமுடன் எடுத்துக்கொண்ட படம். படம்; ஏ.எஸ்.எம்.ஜாவித்

# ஹேனமுல்ல ஜீலான் மாணவர்கள் சிறந்த பெறுபேறு

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

களுத்துறை கல்வி வலயத்தில் பாணந்துறை கோட்டக் கல்விப் பிரிவைச் சேர்ந்த ஹேனமுல்ல ஜீலான் தேசிய பாடசாலையிலிருந்து இம்முறை புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் ஏழு மாணவர்கள் புள்ளிகள் பெற்று சித்தியடைந்து கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளதாக அதிபர் ஹலீம் ஏ மஜீத் தெரிவித்தார்.

சித்தியடைந்த மாணவர்கள் விபரம் வருமாறு:எம்.என்.ஏ.பாஸித் 174, எம்.என்.எப்.ஷபா169, எம்.ஐ.எம். உமர்167, எஸ்.எம். அஹமத் 154, எம்.எப்.எம். பம்ரா153, எம்.ஆர். அம்மார் 153, பர்வீன் பாத்திமா பம்ரா151 ஆகிய மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

மாணவர்களை பரீட்சைக்குத் தயார்ப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவர்களுக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பதாகவும் கல்லூரி அதிபர் மேலும் தெரிவித்தார்.

# துறைசார் பங்களிப்பு செய்த பெண்கள் விருது வழங்கி கௌரவிப்பு



**ருஸைக் பாரூக்**

கொழும்பு வடக்கு இண்டராக்ட் கழகம் ஒழுங்கு செய்த பல்வேறு துறைகளில் பெண்களின் பங்களிப்பை அங்கீகரித்து " She Aspires " விருது வழங்கும் வைபவம் பிரதம அதிதி ரோட்டரி கழக மாவட்ட தலைவி அருணி மலலசேகர தலைமையில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

நிகழ்வில் இலக்கிய துறையில் தரங்க திசாநாயக்க, விஞ்ஞான துறையில் யசோதா விஜேசிங்கேலகே, கல்வி துறையில் கலாநிதி நசீபா பௌஸர், சமூக பணியில் வீரந்தி விஜேமான்னே, கலை மற்றும் பொழுதுபோக்கு துறையில் அசேகா விஜேவர்தன, வர்த்தக துறையில் தியாஷா பொன்சேகா, இளைஞர் சத்மா ஜயசிங்க, விளையாட்டுத்துறையில் செந்தாரு பெரேரா , குழந்தைகளுக்கான பங்களிப்பு அபிராமி சுதாகரன் மற்றும் சுற்றுச்சூழல் அனுஷ்லி சிதம்பரம் ஆகியோர்கள் பிரதம அதிதியிடமிருந்து விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

கௌரவ அதிதியாக கொழும்பு வடக்கு ரோட்டரி கழகத்தின் தலைவர் அம்ஜத் யூசுப், கொழும்பு வடக்கு ரோட்டரி கழக இளைஞர் சேவைகள் தலைவர் மர்ஷத் பாரி, மாவட்ட இண்டராக்ட் தலைவி சம்பா பெரேரா, ஓமன் தூதரகத்தின் செயலாளர் கீதா விஜேசூரிய, மாவட்ட இண்டராக்ட் பிரதிநிதி முர்தாஸ் பாரி, இண்டராக்ட் கழக தலைவி செனந்தி ஜெயவர்தன, செயலாளர் இமாஷா நெத்ஷிலா, திட்டத் தலைவி கித்மி மல்லிகா ராச்சி மற்றும் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியின் 2021 ம் ஆண்டிற்கான கலைவிழா அண்மையில் கல்லூரி ஆர்.ஐ.டி.அலஸ் மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம அதிதிகள் மங்கள வாத்தியங்களுடன் வரவேற்கப்படுவதையும் ஆரம்பப்பிரிவு, இடைநிலைப்பிரிவு மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளையும் படங்களில் காணலாம்.




முன்னாள் அமைச்சர் மர்ஹூம் யூ.எல்.எம் பாரூக்கின் பெயர் கன்னதோட்டை இஹலகம வீதிக்கு சூட்டப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் பிரதம அதிதியாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கலந்து கொண்டு பெயர் பலகையைத் திறந்து வைத்தார்.நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹாசிம், சுஜித் பெரேரா, யூ எல் எம் பாரூக் மன்றத் தலைவர் நிஹால் பாரூக் ஆகியோரையும் படத்தில் காணலாம்.





பேருவளை சீனன்கோட்டை ஆரம்ப பாடசாலையிலிருந்து இம்முறை 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்கள் கௌரவிப்பும் புதிய மாணவத்தலைவர்களுக்கான சின்னம் அணிவிப்பு வைபவமும் (31) பாடசாலையில் நடைபெற்றது. இதற்கு பிரதம அதிதியாக வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் மற்றும் கௌரவ, விசேட அதிதிகள் மாணவர்களினால் மற்றும் பாடசாலை சமூகத்தினால் வரவேற்கப்படுவதையும் சித்தியடைந்த மாணவரொருவருக்கு பிரதம அதிதி பரிசில் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

# இந்தியா - நேபாளம் இடையே ரயில் போக்குவரத்து ஆரம்பம்



இந்தியா நேபாளம் இடையே ரயில் போக்குவரத்தை பிரதமர் நரேந்திர மோடியும் பிரதமர் ஷெர் பகதூர் தேவ்பாவும் தொடங்கி வைத்தனர். அத்துடன் இரு நாடுகளுக்கு இடையிலான பல்வேறு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர்.

இந்தியாவுக்கு வருகை தர வேண்டும் என்று நேபாள பிரதமர் ஷெர் பகதூர் தேவ்பாவுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்திருந்தார். அதை ஏற்று நேபாள பிரதமர் ஷெர் பகதூர் தேவ்பா 3 நாள் பயணமாக கடந்த வெள்ளிக்கிழமை இந்தியா வந்தார்.

டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து தேவ்பா நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார். அத்துடன் டெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் உயர் மட்ட அளவில் இருவரும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இரு நாட்டு தலைவர்கள் சந்திப்பின் போது ரயில்வே, எரிசக்தி உட்பட 4 முக்கிய துறைகளில் இரு நாடுகளுக்கு இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அவற்றில் பிரதமர் மோடியும் பிரதமர் தேவ் பாவும் கையெழுத்திட்டனர்.

நேபாளத்தில் இந்தியா கட்டமைத்துள்ள 'சோலு காரிடார' 132 கிலோவாட் மின் பகிர்மான திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

மேலும், சர்வதேச மின்சக்தி கூட்டமைப்பிலும் நேபாளம் இணைந்து கொண்டது. பிஹார் மாநிலம் ஜெய்நகரில் இருந்து நேபாளத்தின் குர்தா பகுதி வரையிலான ரயில் போக்குவரத்தை இரு நாட்டு பிரதமர்களும் நேற்று தொடங்கி வைத்தனர்.

அத்துடன் நேபாளத்தில் ரூபே பணப் பரிமாற்ற சேவையைப் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இதன் மூலம் இந்தியாவின் நிதி தொடர்பு புதிய மைல் கல்லை எட்டியுள்ளது.

## பிரசித்த ஏல விற்பனை

09ம், 10ம் பெப்ரவரி 2021, 12ம், 13ம் ஜீலை 2021, 12ம், 13ம் ஆகஸ்ட் 2021, 11ம், 12ம் ஒக்ரோபர் 2021, 11ம், 12ம் நவம்பர் 2021, 10ம், 13ம் டிசம்பர் 2021, 10ம், 11ம் ஜனவரி 2022, 10ம், 11ம் பெப்ரவரி 2022, 10ம், 11ம் மார்ச 2022 இல் மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் ருடே ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. எல்.பி.பினான்ஸ் பி எல் சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த முடியாத காரணங்களினால் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜீன், ஜீலை, ஆகஸ்ட், செப்ரம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் 2021" ஜனவரி 2022" பிப்ரவரி 2022" மார்ச 2022 மாதங்களில் ஏல விற்பனைக்கு விட தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகள் மற்றும் ஏப்ரல் மாதம் 2022 ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகளும் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| பொலன்னறுவை, வத்தளை, கந்தானை, ராகம, ஜா-எல, எலகன்த, கொத்தாடுவ புதிய நகரம், கொலன்னாவ, தொட்டலங்க, தெமடகொட, கொம்பணித்தெரு, மஹியங்கனை, மொனராகலை, வெலிமடை, மெதிரிகிரிய, எம்பிலிப்பிட்டி, திஸ்ஸமஹாராம, தெஹியத்தகண்டி, நுவரெலியா, கட்டுநாயக்க-அவிரிவத்த, சிலாபம், கொச்சிக்கடை, நீர்கொழும்பு, நீர்கொழும்பு, நீர்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில, மீனுவங்கொட, நாரம்மல, குளியாபிட்டி, குருநாகல், குருநாகல் பிரீமியர் நிலையம், குருநாகல் நகர கிளை. அளுத்கம, களுத்துறை, பேருவளை, டெல்கந்த, கிருலப்பனை, நுகேகொடை, கோட்டே, பத்தரமுல்லை, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி | 26 ஏப்ரல் 2022 |
| ஹோமாகம, மஹரகம நகர கிளை, மஹரகம, கொட்டாவ, அத்துருகிரிய, தெஹிவளை, மொறட்டுமுல்லை, மொறட்டுவை, கெசெல்வத்தை - பாணந்துறை, வாட்டுவ, தெஹிவளை நகர கிளை, பொரலஸ்கமுவ, பிலியந்தலை, தர்கா நகர், பாணந்துறை, ரத்மலான கல்கிச, அத்திடிய, வெள்ளவத்தை, வெள்ளவத்தை நகர கிளை, பிரீமியர் கொழும்பு 07, கொள்ளுப்பிட்டி நகர கிளை, தலைமை அலுவலகம் கொழும்பு 07, கொள்ளுப்பிட்டி கார்ப்பரேட் அலுவலகம் கொழும்பு 03. கிரிபத்கொடை, தெல்கொடை, கடவத்தை, களனி, கடுவெல, கிரிபத்கொடை-மாகொல, கனேமுல்லை, கேகாலை, திஹாரிய, வரக்காபொல, நிட்டம்புவ, கம்பஹா, திவுலபிடிய | 27 ஏப்ரல் 2022 |
| மாத்தறை, மாத்தறை நகர கிளை, தெனியாய, நெலுவ, அக்குரஸ்ஸ, எல்பிட்டிய, பிட்டிகல, ஹொரணை, பண்டாரகம, பிலிமத்தலாவை, கண்டி, கண்டி நகரம் கிளை, கடுகஸ்தோட்டை, நாவலப்பிட்டி, மாத்தளை, கெலிஓயா, மாலபே, புத்தளம், மத்துகம, பதுரெலிய, ஆனமடுவ, ஜம்பெட்டா வீதி கிளை, டாம் வீதி கிளை, டீன்ஸ் வீதி கிளை, மருதானை, பொரளை, பலாங்கொடை, அவிசாவளை, எஹெலியகொட, இரத்தினபுரி, ஹங்வெல்ல, புசல்லாவை, கம்பளை, கம்பளை நகர கிளை. கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தை கொழும்பு 15, மட்டக்குளி, மோதறை, கிராண்ட்பாஸ் சுலைமான் கொழும்பு 14, கிராண்ட்பாஸ். | 28 ஏப்ரல் 2022 |
| கராபிட்டிய, காலி தங்காலை, அம்பலாங்கொட, பதுளை, பதுளை நகர கிளை, பண்டாரவளை, சங்கராஜ மாவத்தை கொழும்பு 10, மாளிகாவத்த, செட்டியார் தெரு, கொஹுவல, ஹட்டன், மஸ்கெலியா, தம்புள்ளை, கெக்கிராவ, அனுராதபுரம் நகர கிளை, அனுராதபுரம், மதவாச்சி, தம்புத்தேகம, செங்கலடி, வாழைச்சேனை, மன்னார், சாவகச்சேரி, கிண்ணியா, திருகோணமலை, வவுனியா, கொக்கட்டிச்சோலை, ஆராயம்பதி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, அட்டாளைச்சேனை, யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் பிரீமியர், யாழ்ப்பாண நகரம், அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, சாய்ந்தமருது, சம்மாந்துறை, கல்முனை, மல்லாவி, வட்டுக்கோட்டை,சங்ானை | 29 ஏப்ரல் 2022 |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம்

LB FINANCE

தலைமை முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

# பெறுகை அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கான பெறுகை பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| இல. | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபா) (வரி நீங்கலாக) | ICTAD தர பதிவு | பிணைப் பணம்.·. காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 4 | KN/EB/DO4/ IMP/ KQ/1104-2 | கண்டாவளை பிரதேச செயலாளர் விடுதிக்குரிய மேம்படுத்தல் வேலைகள் | 2.21 மில்லியன் | C8 and C7 Building | ரூபா 23000/- 25.07.2022 வரை | 2000/- |
| 5 | KN/EB/DO4/ IMP/ PQ/1104-3 | பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் விடுதிக்குரிய மேம்படுத்தல் வேலைகள் | 2.69 மில்லியன் | C8 and C7 Building | ரூபா 27000/- 25.07.2022 வரை | 2000/- |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்களாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப்பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II. இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (ii) இலக்க 08.05.2019 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு 5மூ முன்னுரிமையளிக்கப்படும்.
   IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்றவேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவணைப்படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்.
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285663, பக்ஸ் இல: 0212283966)
3. கேள்வி ஆவணங்களை 05.04.2022ஆம் திகதியிலிருந்து 26.04.2022ஆம் திகதிவரை முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வேலைநாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப்பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting) 18.04.2022ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட, பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "KN/................"" என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு 27.04.2022ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**திருமதி. றூ. கேதீஸ்வரன்,**
**திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவர்/மாவட்டச் செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

**தேசிய போட்டி ரீதியிலான**
**விலைமனுக்களுக்கான அழைப்பு**

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் - சுத்திகரிப்பு பணிமனை
பொதுக் கேள்வி: **4428T**
குறிப்பிட்டவாறான துண்டுகளில் சீருடை பொருட்களை வழங்கல் - துவாய்கள் மற்றும் காலுறைகள்

மேலே குறிப்பிட்டுள்ள அம்சங்களின் வழங்கலுக்காக உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து இலங்கை, களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

விலைமனுவொன்றை சமர்ப்பிக்கும் எந்தவொரு விலைமனுதாரரும் கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள இபெகூ தலைமையலுவக 5 ஆம் மாடியிலுள்ள காசாளருக்கு கோரிக்கைக் கடிதமொன்றுடன் மீளளிக்கப்படாத ஆவணக் கடிதமாக 1,000 ரூபாவை 2022 ஏப்ரல் 25 ஆம் திகதி வரையும் பி.ப. 3 மணிக்கு முன்னராக களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனையின் காசாளருக்கு செலுத்தலாமென்பதுடன் கேள்வி இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயர் ஆகியவற்றை சுருக்கமாக குறிப்பிட்டு 004100110208633 என்ற மக்கள் வங்கியின் கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணத்தில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பெயரில் பணக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

கேள்வியின் நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புக்கள் ஆகியவற்றை அடக்கியுள்ள விலைமனுக்கோரல் ஆவணமானது **www.ceypetco.gov.lk** மற்றும் **www.dgmarket.com** ஆகிய இணையதளங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாற்று வழியாக, விலைமனுக்கோரல் ஆவணங்களை கீழேயுள்ள முகவரியிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2022 ஏப்ரல் 27 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் சுத்திகரிப்பு மனை பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் உடனடியாகவே திறக்கப்படும்.

தற்போது நிலவும் நெருக்கடியான சூழலின் காரணமாக பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் சமுகமளிப்பதற்கு ஊக்கம் வழங்குவதை நீக்கம் செய்வதுடன் விலைமனுதாரர்கள் சர்வதேச வலையமைப்பு வீடியோ மாநாட்டு முறைமையினூடாக பங்குபெறுவதற்கு/ சாட்சியளிப்பதற்கும் அனுமதிக்கப்படுவார்கள். வருகை தருவது உண்மையாகவே அவசியமென்றால் மாத்திரமே ஒரு பிரதிநிதி மாத்திரம் கம்பனியொன்றிலிருந்து அனுமதிக்கப்படுவார். இருப்பினும், விலைமனுக்களை திறந்த பின்னர் விலைமனு திறத்தலின் சுருக்கமொன்றை கீழேயுள்ள முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**முகாமையாளர் (பண்டங்கள்),**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்பு பணிமனை, சப்புகஸ்கந்த**
**களனி,**
**தொலைபேசி: 0094-11-2400110**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## CRP reagents கொள்வனவு செய்தல்

**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை - களுபோவில தெஹிவளை**

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் இந்த வைத்தியசாலையின் பிரதான ஆய்வுகூடத்திற்கு CRP reagents கொள்வனவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(01) இது தொடர்பில் ஆர்வம் காட்டுவோர் விலைமனு ஆவணக் கட்டணமாக 2,000.00 ரூபாவை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் தமது தேசிய அடையாள அட்டையும் சமர்ப்பிப்பதன் பேரில் 2022-04-05ஆம் திகதி முதல் 2022-04-19ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை இந்த வைத்தியசாலையின் நிதிப் பிரிவில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(02) விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலைக்கு **CRP reagents** கொள்வனவு செய்தல் - 2022-04-20'' எனக் குறிப்பிட்டு 2022-04-20ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில, தெஹிவளை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். 2022-04-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கணக்காளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

(03) விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வெறொரு உறையில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(04) விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவ்விடத்திலேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் அவ்வேளையில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

(05) விலைமனு ஆவணங்களை இலவசமாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை கணக்காளரின் அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

(06) அரசாங்க ஒப்பந்தங்கள், நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ள நபர்களுக்கு விலைமனு விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

(07) குறித்த விலைமனுவை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

(08) மேலதிக விபரங்களுக்கு கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை கணக்காளரைத் தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி: 0112763038)

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,**
**களுபோவில, தெஹிவளை.**

# கேள்வி அறிவித்தல்

## சுகாதார சேவை திணைக்களம் – கொழும்பு மாவட்டம்

## அழுக்குத் துணிகளைச் சலவை செய்தல் - 2022

எமது கொழும்பு பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகப் பிரிவிற்குரித்தான பின்வரும் நிறுவனங்களின் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| லொட் இல. | நிறுவனத்தின் பெயர் | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|
| 1 | அவிசாவளை தள வைத்தியசாலை | 1000.00 |
| 2 | மாளிகாவத்தை வைத்தியசாலை | 500.00 |
| 3 | தலங்கம வைத்தியசாலை | 500.00 |
| 4 | நவகமுவ வைத்தியசாலை | 500.00 |
| 5 | கொஸ்கம வைத்தியசாலை | 500.00 |
| 6 | பாதுக்க வைத்தியசாலை | 500.00 |
| 7 | அத்துருகிரிய வைத்தியசாலை | 500.00 |
| 8 | பாலியல்சார் நோய்கள் ஒழிப்புப் பிரிவு | 500.00 |

